Registered as a News paper in Ceylon

விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்




JAFFNA COLLEGE
16 AUG 1971
GRADUATE LIBRARY

மலர் 13 | ஆடி 30 | ஜ: ஆகிர் 23 | ஞாயிற்றுக்கிழமை | (15—8—71) | இதழ் 183

# "ஓவர்டைம்" கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது

## அரசு செய்த புதிய முடிவு

அரசாங்க நிறுவனங்களில் ஊழியர்கள் "ஓவர்டைம்" செய்வதற்குள்ள கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

அமைச்சிலோ அல்லது அதன்கீழ் இயங்கும் திணைக்களங்களிலோ 'ஓடர்டைம்' செய்யவேண்டிய அவசியம் ஏற்படுமானால், எந்தவொரு ஊழியர்களாயினும் அவர்கள் செய்யும் 'ஓவர்டைம்' பற்றிய முடிவை அப்பகுதி அமைச்சோ அல்லது நிரந்தரக் காரியதரிசியோதான் முடிவுசெய்வதென அரசாங்கம் நிர்மானித்துள்ளது.

அரசாங்க சேவையிலுள்ள ஊழியர் ஒருவர் ஒருவாரத்துக்கு 10 மணித்தியாலங்கள்தான் ஓவர்டைம் செய்யலாம்.

வேறு எந்த அதிகாரிகளுக்கும் நிரந்தரக் காரியதரிசிகள் இந்த உரிமையை அளிக்கமுடியாது.

எந்தவொரு அமைச்சின் கீழாவது இயங்காத திணைக்களஊழியர்கள்பற்றிய விஷயத்தில், இதற்கான விண்ணப்பங்களை பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, சனி

நேற்று முன்தினம் கண்டி போகம்பரை மைதானத்தில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 358-வது தேசிய சுவீப்பின் முதல் மூன்று பரிசுகளையும் பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

**முதலாவது பரிசு**
30 F 0611
ரூபா 1,00,000

**இரண்டாவது பரிசு**
39 L 0525
ரூபா 40,000

**மூன்றாவது பரிசு**
07 S 0374
ரூபா 10 000

தலா ரூபா 528 60 ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 31 K 0547 | 39 U 0516 | 18 S 0394 | 01 Y 0925 |
| 17 T 0711 | 28 F 0247 | 04 A 0795 | 29 S 0754 |
| 33 D 0370 | 26 T 0964 | 38 U 0188 | 30 Q 0257 |
| 19 O 037 | 21 P 0843 | 17 X 0528 | 18 V 0006 |
| 10 Q 0585 | 03 Q 0007 | 35 J 0300 | 04 Y 0157 |
| | | 02 L 0546 | 08 Q 0374 |
| | | 18 O 0493 | 21 H 0949 |
| | | 26 N 0791 | 31 Q 0926 |
| | | 10 M 0935 | 15 J 0418 |
| | | 2? R 0547 | 19 N 0271 |
| | | 36 B 09[illegible] | 4? N 0221 |
| | | 03 C 0801 | 06 N 0412 |
| | | 41 N 0032 | 32 G 0563 |
| | | 02 Q 0616 | 38 D 0457 |
| | | 07 H 0311 | 20 R 0668 |
| | | 28 G 0940 | 23 U 0686 |
| | | 21 A 0633 | 20 J 0218 |
| | | 07 C 0300 | 04 H 0192 |
| | | 06 O 0588 | 20 Z 0420 |
| | | 32 G 0328 | 26 O 0719 |
| | | 41 Y 0555 | 24 D 0217 |
| | | 38 L 0274 | 32 F 0787 |
| | | 16 A 0905 | 10 T 0998 |
| | | 41 B 0516 | 04 T 0504 |
| | | 24 T 0494 | 34 O 0195 |
| | | 08 C 0329 | 40 A 0296 |
| | | 37 Z 0622 | 11 E 0904 |

(12-ம் பக்கம் பார்க்க)

## பிர்லா மாளிகை காந்திசதனமாகும்

புதுடில்லி, ஆக. 14

பிர்லா நாட்டுக்கு இந்திய சுதந்திர தினமான நாளையிலிருந்து காந்திசதன் என்று பெயரிடப்படும். காந்தி அடிகள், கோட்சேயினால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னர் பிர்லா மாளிகையிலேயே தங்கியிருந்தார். பிர்லா காந்தி அடிகள் தங்கியிருந்த அந்த மாளிகையை காந்தியடிகளின் நினைவுச்சின்னமாக்குவதற்காக அரசாங்கத்திடம் ஒப்படைத்தார். இந்த மாளிகைக்கே இப்பொழுது பெயர் மாற்றப்படுகிறது.

இது பொதுமக்கள் பார்வைக்காக நாளைய தினம் முதல் முறையாகத் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

வருமான வரிப்பாக்கியை

## செலுத்தாத ரி. ஆர். பி. காரரின் சொத்துக்கள் பறிமுதல்!

கொழும்பு, சனி

தற்காலிக வாசால பர்மிட்டிலுள்ள இந்திய வம்சாவழியினருக்குச்சொந்தமான நிலங்களை அரசாங்கம் சுவீகரிக்கவிருப்பதாகத் தெரிகிறது. இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படவேண்டிய வருமான வரிப் பாக்கியைச்செலுத்தாமல் டிமிக்கிவிட்டு இவர்கள் நாட்டைவிட்டுச்செல்வதற்கு முயற்சிப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

குடி அகல்வு-குடிவரவு கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற அறிக்கையைத் தொடர்ந்து இவ்வித முடிவு எடுக்கப்பட்டுள்ளது இவ்விதம் பறிமுதல் செய்யப்படும் சொத்துக்களை விற்று அரசாங்கத்துக்குவரு மதியான வருமான வரிப்பாக்கியை எடுத்துக் கொண்டு மிகுதிப்பணத்தை இந்த ரி. ஆர். பி.க்காரரிடம் அரசாங்கம் ஒப்படைக்கும் என்று தெரியவருகிறது. இவர்கள் பல லட்சம் ரூபா வரையில் வருமானவரி செலுத்தாமலிருக்கிறார்கள். இவர்களுக்கு தோட்டப் பகுதியிலேயே அதிகமான சொத்துக்கள் இருக்கின்றனவாம். (இ. பி ஏ.)

### பெறுபேறு கிடைத்ததா

கோட்டை, சனி

ஜீ. சி. ஈ. சாதாரணபரீட்சைப் பெறுபேறுகள் இதுவரை கிடைக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகளை உடனடியாக பரீட்சைப்பகுதியினருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

## ஒலிபெருக்கி அனுமதி வழங்க மறுத்ததேன்?

### ஆட்சிமன்றத்தில் உடுவில் எம். பி. கேள்வி

(நமது நிருபர்)

ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதி வழங்குவது பற்றி உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் இன்று ஆட்சிமன்றத்தில் கேள்வி ஒன்றைக் கிளப்பினார்.

திரு. தர்மலிங்கம்பேசுகையில் ஒருவர் தன்னுடைய கருத்தைத் விளக்குவதைக் கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாதென அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா தெரிவித்திருந்தார். ஆனால் தமிழரசுக்கட்சியினருக்கு மட்டும் ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. இதே நேரத்தில் யாழ்ப்பாணம் மாநரசபை மேயர் திரு அல்பிரட் துரையப்பாவின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கும், வேறு இரு சந்தர்ப்பங்களிலும் ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார்

பாதுகாப்பு அமைச்சின் உதவி அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி இதற்குப் பதிலளித்துப் பேசுகையில், இன்றைய அரசியல் சூழ்நிலையில், ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதியை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியும் பொலிஸ்மா அதிபருமே வழங்கிவருகின்றனர். இவர்களுக்கு ஒலிபெருக்கி அனுமதி வழங்கினால் அது திரு. மாட்டின் மீது தாக்குதல் தொடுக்கவும் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படவும் வழிவகுக்கும் என்றார்.

நாடு குடியரசானதும்

## நாட்டுக்கு உழைப்பவர்களுக்கு சுதேசிய விருதுகள்

(நமது நிருபர்)

புதிய அரசியல் திட்டம் கொண்டுவரப்பட்டு இலங்கை குடியரசாக்கப்பட்டபின், இந்தியாவில் அளிக்கப்படும் பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் போன்ற சுதேசிய பட்டங்களை இலங்கையர்களுக்கு அளிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது.

நாட்டுக்காக உழைப்பவர்கள், நாட்டின் கலாச்சார, பொருளாதார மேம்பாட்டுக்காக உழைக்கும் பெரியார்களுக்கு இவ்விருதுப் பட்டங்கள் அளிக்கப்படும். இதற்கான சுதேசிய விருதுப் பட்டங்கள் பற்றிய பட்டியல் ஒன்று இப்பொழுது அரசினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

1956-ம் ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தபின், பிரிட்டிஷ் மகாராணியினால் வழங்கப்பட்டு வந்த கௌரவப் பட்டங்கள் ஒழிக்கப்பட்டது தெரிந்ததே.

### இன்று மடுமாதா திருநாள்

# மக்கள் துயர் தீர்க்கும் மருதமடு மாதா

— செல்வி. நிர்மலா நாகநாதர் —

கிறீஸ்துவத் திருமறை உலகின் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது. உலகிலுள்ள எல்லா இன மக்களும் இத்திருமறையின் ஒளியைக்கண்டடைந்துள்ளனர். உலகில் அறியப்பட்டுள்ள எல்லா மொழிகளையும் பேசுபவர்கள் எல்லோரிடையேயும் கிறிஸ்துவ மதம் வேரூன்றியுள்ளது.

நம் இலங்கையில் கிறிஸ்து மதம் நன்கு வேரூன்றியுள்ளது. கிறிஸ்துவ மதம் ஐரோப்பிய அன்னிய சமயமன்று. இந்து பௌத்த இஸ்லாம் மதங்களைப் போன்று கிறிஸ்தவ மதமும் ஓர் ஆசிய கீழைத்தேய மதமாகும். எனினும் இம்மதம் முற்போது ஐரோப்பிய நாடுகளில் அதிகமாகப்பரவியது. ஐரோப்பியரே இம்மதத்தைப் பிறதேசங்களிற் பெருமளவிற் பரப்பிவந்தனர்.

## மாதா பேரில் பற்று

இலங்கையிற் தமிழ் மக்களுள் மன்னார் வாசிகளே முதலில் கிறீஸ்தவ சமயத்தைச் சார்ந்தனர். பின்பு இம்மதம் யாழ்ப்பாணப் பகுதியிலும் பரவியது. அந்நாளில் யாழ்ப்பாணப் பிரதேசத்தை சங்கிலி அரசன் நல்லூரிலிருந்து (1519-1561) ஆட்சிபுரிந்து வந்தான். மன்னாரும் இவனுக்கு சிக்குட்பட்டிருந்தது. மன்னார் முழுதும் கத்தோலிக்க நாடானது. மன்னாரையடுத்துள்ள மாதோட்டம்-மாந்தை மக்களும் கத்தோலிக்கராயினர்.

மாதோட்டக் கத்தோலிக்கர் செபமாலை மாதாவின் பெயரினாலே ஒருபெரிய கோவிலைக்கட்டினர். அது மாந்தை மாதா கோவில் என அறியப்பட்டுவந்தது.

மன்னார் வாசிகள் கத்தோலிக்கரான செய்தியை அறிந்த சங்கிலி அரசன் சினங்கொண்டு மன்னார் மக்கள் எழுநூறுபேரை வாளுக்கிரையாக்குவித்தான். இது நி[illegible], தம் மதத்துக்காக மாண்டவர்கள் மன்னார் வேதசாட்சிகள் என இன்றும் அழைக்கப்படுகின்றனர். இச்சம்பவத்தின் பின்புதானும் மன்னார் மாதோட்டமக்கள் மசியாத சமயப்பற்றுடையவர்களாகவே விளங்கி வந்தனர். மாதாபேரில் மிகு பற்றுடையோராய் மாதா கோவிலையும் மாதா சுருபத்தையும் கண்சிமையாய்ப் பாதுகாத்துவந்தனர்.

## மருதமடு கிராமம்

153-ஆண்டுகளின் பின் போர்த்துக்கேசரின் ஆட்சி முடிவுற்றது பின்பு ஐரோப்பிய ஒல்லாந்த நாட்டினர் இலங்கையை (1658-1796) ஆட்சி புரிந்தனர். ஒல்லாந்தர் கத்தோலிக்க மதத்துக்கு முற்றும் மாறான சமயத்தை மக்களிடையே பரப்பிவந்தனர். இவர்களால் அல்லற்பட்ட கத்தோலிக்க மக்கள் பலர் இடம் பெயர்ந்தனர். மாந்தை மக்களுள் பக்திமிக்க குடும்பத்தினர் பலர் ஒல்லாந்தரின் நெருக்கடிக்கஞ்சி மாந்தை மாதா சுருபத்துடன் 1670-ம் ஆண்டில் மாதோட்டத்தைவிட்டு ஒளித்து வன்னிக் காட்டில் பல நாள் சரந்து அலைந்து திரிந்து முடிவில் தெய்வச் செயலால் மருதமடு என்னும் கிராமத்தையடைந்து தங்கினர். அதே நாளில் யாழ்ப்பாணத்திலிருந்தும் புறப்பட்ட கத்தோலிக்கர் பலரும் அவ்விடத்தை அடைந்தனர்.

## மருதமடுப்பதி யாத்திரைத் தலமாயிற்று

கண்டியரசனின் ஆட்சிக்குட்படிருந்த மருதமடுவில் கத்தோலிக்க மக்கள் தாம் வாதுகாத்துக்கொண்டுவந்த செபமாலை மாதா (மாந்தை மாதா) சுருபத்தை வைத்து ஒரு கொட்டிற் கோவில் கட்டி வணங்கிவந்தனர் முப்பது வருடங்களாக இலங்கையில் கத்தோலிக்க மதத்தைக் கவனிக்கக் குருமார் இல்லாதிருந்தனர்.

ஒல்லாந்தரின் ஆட்சியும் 1796-ம் ஆண்டில் முடிவுற்றது. பின்பு ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்டது மக்களுக்கு சமய சுதந்திரம் கிடைத்தது. பழையபடி கத்தோலிக்க மதம் தழைத்து வளரத் தொடங்கியது. இந்தியாவிலிருந்து வந்த கோவைக் குருமார் பலர் இங்கிருந்து மதத்தைப் பரப்பிவந்தனர் பல இடங்களிலும் பல தேவாலயங்களைக் கட்டினர்.

மருதமடுப்பதியும் நாளடைவில் பிரபல்யம் பெற்றது. மற்றும் சமயத்தவர்களுக்குள்ளதுபோன்ற மடுப்பதியும் யாத்திரைத்தலமாயிற்று.

1823-ம் ஆண்டில் மடுவில் மண்சுவரால் முதலில் கோவில் கட்டப்பட்டது. 1846-ம் ஆண்டில் யாழ்ப்பாண சமய ஆதீனம் தாபிக்கப்பட்டது பின்பு தற்போதைய கோவில் கட்டப்பட்டது. 1870-ம் ஆண்டில் மருதமடு யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. 1924-ம் ஆண்டில் மடுமாதா சுருபத்துக்குத் திருமுடி சூட்டப்பட்டது. 1948-ம் ஆண்டில் மடுமாதா சுருபம் யாழ்ப்பாண ஆதீனம் முழுதும் பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது. 1949-ம் ஆண்டில் மடுப்பதியில் மருடாரணவென் பொன் பூபிலி விழா பேராய்க் கொண்டாடப்பட்டது. இங்ஙனம் முந்நூறு ஆண்டுகளுக்குமுன் ஆரம்பமான மருதமடுத் திருப்பதியானது இன்று இலங்கையின் மாபெரிய கத்தோலிக்க யாத்திரைத் தலமாய்த் திகழ்கின்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**ஞாயிறு 15—8—71**

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை 6-15 கிறிஸ்தவ நற்சிந்தனை 6-20 பௌத்த நற்சிந்தனை, 6-25 துதிப்பாடல்கள் 7-00 மெல்லிசை, 7-30 திரை கானம், 8-00, இசை வேளை, 8-15 பேச்சு, 8-30 சைவநீதி 9-30 முஸ்லிம் நிகழ்ச்சி 10-00 தொழிலாளருடன் 10-30 படத்திலிருந்து, 11-15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதி, 1-05 மாதர் நிகழ்ச்சி மாலை 4-30 சங்கமம், 5-00 சிறுவர் பாடல்கள் 5-30 ஞான மஞ்சரி 6-15 மெல்லிசை, 6-30 செய்தித் தொகுப்பு, 6-45 திரை கானம் 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி,


## இதோ எதிர்பார்த்த அரிய சந்தர்ப்பம்!

## குறைந்த விலையில் சிறந்த பொருட்களைப் பெறுங்கள்!!

ரூபா ஐம்பதுக்கு மேல் புடவைகள் வாங்கிப் பரிசையும் எதிர்பாருங்கள்

விசேட பாவிப்புக்கான

அழகிய சரிகை நூல் வேலைப்பாடு அமைந்த செயற்கைப் பட்டுகள்

- ★ கண்கவர் வர்ணச் சேலைகள்
- ★ கவர்ச்சி மிக்க வேட்டி சால்வைகள்
- ★ அழகுறு பாவாடைத் துணிகள்

நித்தம் பாவிப்புக்கான

- ★ உறுதிபெற்ற பலவர்ணக் கைத்தறிச் சேலைகள்
- ★ பரமாஸ் வேட்டி சால்வைகள்
- ★ சாரங்கள், படுக்கை விரிப்புகள், துவாய்கள்

குழந்தைகளின் அழகை எடுத்துக் காட்டும் அழகழகான வர்ண உடுப்புகள்

சிறுவர்கள் விரும்பி உண்ணும் சுவைமிக்க போஷாக்கு நிறைந்த

பிஸ்கட், கேக் வகைகள், பணிஸ் வகைகள்

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய உடன் விஜயம் செய்யுங்கள்

**அரசடிச்சந்தி, நல்லூர்** (கோவிலுக்கு அருகாமையில்)

திருவிழாக் காலத்தில் மாத்திரம்

உற்பத்தியாளர்கள்:

## பண்டத்தரிப்புக் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்

பண்டத்தரிப்பு.

2964

சிறுகதை

# கடவுள் ஏன் கல்லானார்?

— க. பேரின்பநாயகம் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

எவனொருவன் எந்த வைராக்கியத்துடன் வளர்ந்து, உறவை மறந்து, உரிமையை மறந்து பிரிந்து வாழ்ந்தாலும், அவனுடைய இரத்தஉறவு பாசம் என்பன எவ்வளவு கொடுமை செய்தவனாக இருந்தாலும்- கொடுமைக்காளாக்கப் பட்டவனாக இருந்தாலும் கடைசிக் காலத்திலாவது அவன் உள்ளத்தில் உணர்ச்சி அலைகளை எழுப்பத்தானே செய்யும். இந்த வகையில் இதுவரைகாலமும் தம்பி பொன்னம்பலம் விசுவாசத்துடன் சேர்ந்துகொண்டு தனக்கும் தன் குடும்பத்திற்கும் செய்த கொடுமையெல்லாம் மறந்து, உறவினர்களின் எதிர்ப்பையும் சமாளித்துக்கொண்டு தம்பியைக் காண யாழ். பெரியாஸ்பத்திரிக்குச் சென்றார் அண்ணன் சிவசம்பு. அதேபோல விசுவாசம் குடும்பத்தினரின் மாயையில் கிடந்து மனமிழந்து, பாசமின்றி இருந்த தம்பிபொன்னம்பலமும் அண்ணனைக்கண்டு கண்ணீர் விட்டார். சுற்றி நிற்பவர்களோ உறவென்று தெரியாத பணந்தின்னும் கழுகுகள். தம்பியோ தனிமையில்; இந்நிலைகண்டு கலங்கினார் சிவசம்பு.

பணத்தைநீதியாகச் சேர்ப்பவன் உலகில் வாழ்ந்தான் செய்கிறான், அநியாயமாகச் சேர்ப்பவனும் வாழ்த்தான் செய்கிறான். எதிரெதிராகவே சிருஷ்டித்து எதிர்ப்பைக்கண்டு உயர்வடையும்- புனிதமடையும் தத்துவத்தைவெளிப்படுத்த சிருஷ்டிகர்த்தா செய்தவேலை இது. எனவே பார்த்து நடக்க வேண்டியது நம்மவர்பொறுப்பு. பணத்தை நீதியான வழியில் சேர்த்தறியாத விசுவாசம் சிவசம்புவின் வரவு தன் எண்ணத்திற்கு அழிவைத்தருமோ. பொன்னம்பலத்தின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துமோ என்று பயந்து! சிவசம்பு ஆஸ்பத்திரிக்கு வருவதைத் தடுக்க தன்னாலானவரை முயன்றார். உறவை, உள்ளத்தில் நிறைந்த உயிர்த்துடிப்பான பாசத்தை எத்தனை நாளைக்குத்தான் ஒத்திவைக்கமுடியும் கடைசிக் காலத்திலாவது, தன் உடன்பிறப்புக்கு கடமைசெய்ய முன்னின்றார் சிவசம்பு.

திடீரென்று ஒருநாள் நிலைமை படுமோசமாகிறது. பொன்னம்பலம் சுவாதீனமற்றவராக மாறினார். சமயம்பார்த்திருந்த பொன்னம்பலத்தின் திரண்ட சொத்தை, தனதாக்கிக் கொள்ளக் காத்திருந்த விசுவாசம், இந்நிலைகண்டு பதறினார். எங்கே என் எண்ணம் நிறைவேறுதோ! காலம் காலமாகக் காத்திருந்த பொருள் கைவிட்டு நழுவுமோ ஏவல்செய்து எதிர்பார்த்தபொருள் இன்னொருவர் கைக்கு மாறிவிடுமோ! என்று அஞ்சினார். சிவசம்புவோ தம்பியின் நிலைகண்டு கலங்கித் தானும் மனதைக் கலக்கிக்கொண்டார். பொன்னம்பலத்தின் நிலையோ படுமோசமாக மாறிக்கொண்டிருந்தது.

இந்த நிலையில்தான் உள்ளத்தில் எழுந்த பயம் காரணமாக உறுதியோடு அது தனக்கேசேரவேண்டும் என்று உறுதியாக முடிவிட்டு எழுதப்பட்டபின் பொன்னம்பலத்திற்கு இதுகாலவரை உதவிசெய்து வந்ததற்கான கடைசிமுத்திரையை- கைபொப்பத்தைப் பெற ஓடோடியும் வந்தார் விசுவாசம். பொன்னம்பலத்தின் உடல்நிலை இம்முயற்சிக்கு சிறிது கஷ்டத்தைத் தந்தாலும், சோர்ந்து விழுந்த கையைத்தூக்கி நிமிர்த்தி, சுயாதீனமற்ற நிலையிலிருக்கும் பொன்னம்பலத்தின் கையால் கீறிவிட்டார் விசுவாசம். பொன்னம்பலத்தின் கைபொப்பம் எப்படியோ சுவாமியாகிவிட்டது.

கைபொப்பம் வாங்கிய சிலநிமிட நேரத்தின்பின் பொன்னம்பலத்தின் ஆவி பிரிந்தது. ஊர் உலகம் என்ன சொல்லும் என்பதற்காக, சொத்து முழுவதும் தனதாக்கிக் கொண்ட விசுவாசம், பொன்னம்பலத்தின் உயிரற்ற உடலை தனது வீட்டுக்குக் கொண்டுவந்தார். சொந்த அண்ணனோ, உறவினர்களோ எவருமின்றி பொன்னம்பலத்தின் உடல்அநாதரவாக மயானம் நோக்கிக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கேபணம்என்ற ஒன்றுக்காக நெருங்கிய உறவாக்கப்பட்ட விசுவாசம், நெருப்புவைக்க பொன்னம்பலத்தின் உடல் காற்றுடன் கலக்க ஆரம்பித்தது அதோடு சென்றவர்தான் விசுவாசம், மறுநாள் சம்பிரதாயங்களின் தொடர்ச்சியான சாம்பல் அள்ளும் சடங்கிற்கு வந்தார். கொள்ளி வைத்தவர் என்பதற்காக. அங்கேயரைகுறையாக கருகிக்கிடந்த பொன்னம்பலத்தின் உடலை வெட்டிப்புதைத்து எதையோ பொன்னம்பலத்தின் சாம்பல் என்று அள்ளிக்கொண்டு முடிந்தது கடமை, தொலைந்தது சனியன் என்று வீடு வந்து சேர்ந்தார் விசுவாசம்.

பொன்னம்பலம் வியர்வையாக இரத்தம்சிந்திசேர்த்து வைத்த சொத்தைப் பெற்ற விசுவாசம்- அந்தச்சொத்துக்காக காலம்காலமாகபொன்னம்பலத்திற்கு பணிவிடை செய்த விசுவாசம்- மனிதமனமற்ற விசுவாசம் அந்த சொத்துக்குரியவனின் உடலை வேகவைக்கக்கூட பொறுமையில்லாத விசுவாசம் இன்று கோலாகலமாக பூசை செய்கிறார்.

(5)

டும், டுமீர்... பட்டாசுகளின் ஒலி வானைப் பிளக்கின்றது. வாணங்களின்ஒளி வர்ணஜாலங்களைக் காட்டுகின்றன. இன்னொருபக்கத்தில்; வானொலிப் பெட்டியுடன் தொடுக்கப்பட்ட ஒலிபெருக்கி, இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நேயர் விருப்ப நிகழ்ச்சியை ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறது. வடை, வாழைப்பழம் தேங்காய் மற்றும் பழவகைகள், அபிஷேகத்திற்குரிய பொருட்கள் அபரிமிதமாக படைக்கப்பட்டிருக்கின்றன. பிரசாதமணம் மூக்கைத் துளைக்கின்றது. ஊதுவத்திகளும் மற்றும் சுகந்தவாசனைகளும் சுகானுபவத்தைத் தருகின்றன. இத்தனைக்கும் மேலாக நெற்றியிலே விபூதிப் பட்டையம் தீட்டி, பட்டுவேட்டி சகிதம் பூசாரி விசுவாசம் ஏதோ நாடகமேடையில் பங்குபற்றுபவர்போலகுறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டுக் கொண்டு நடவடிக்கைகளைக் கவனிக்கின்றார்.

மனிதனின் ஆசைகளை மனம் திறந்து சபிப்புத்தன்மையோடுகேட்பவனும், திட்டுக்களையும்வசைகளையும் பொறுமையோடு மனம் கோணமல் ஏற்பவனும், இந்தப்பரந்தஉலகில் இறைவனொருவன்தான் அதனால்தான் இறைவனைக் கல்லாக சமைத்தார்களோ என்னவோ தெரியாது. அந்தக் கல்லிருக்கும் இடத்தில் ஓர் உயிர் இருக்குமேயானால், கல்லடி படவேண்டியிருக்கும். சாந்தி, யேசு, கோவிந்தவர்கள் பட்டபாடு படவேண்டியிருக்கும். அந்தக் கல்லு வாய்திறந்துபேசினால் பேச்சில தெய்வீகத்தன்மையைக் காட்ட வேண்டிவரும். அப்படி தெய்வீகத்தன்மையைக் காட்டினால் எத்தனையோ பணக்காரர்கள் கோவில்களையும் தெய்வச்சிலைகளையும்நோக்கி சம்மட்டிகளோடு புறப்பட்டிருப்பார்கள். குடியிருக்க நிலமில்லாமல்கூட ஆக்கியிருப்பார்கள். ஏன் நாளடைவில் தெய்வத்தைக் கொண்டாடும் வழக்கமே மறைந்துவிட்டாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நிலையேற்பட்டால் நாஸ்திகன் நிலைக்கு ஆஸ்திகன் தாழ்த்தப்பட்டு இன்றைய நாஸ்திகன் பெறும் அல்லலைப் பெற வேண்டியிருக்கும் நாட்டில் நடக்கும். நல்லவை கூடநடக்காது: நல்லவர்களையே காணமுடியாது. பயம் இன்றி கொடுமைகள் பெருகும். மனிதனை மனிதனாகவே காணமுடியாது. முடிவில் மனிதனையே காணமுடியாத நிலைஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவே ஏழைகளுக்காகவேனும் வாழ்க்கையின் நலிவுகளுக்காகவேனும்- துன்பத்தையே காண்பவர்களுக்காகவாவது சமுதாய ஏற்ற இறக்கங்களுக்காகவாவது ஏன் தன்னை நம்பி நிற்காத்து மனிதனை மனிதனாக உலகில் வாழவைக்கவாவது, இறைவன் கல்லாகஇருந்தேயாகவேண்டும் கல்லாய்த்தான் இருக்கிறான். அவன் மாக கணக்கைப் பார்த்துக்கொண்டும் இருக்கிறான். கணக்கிற்கு மேலாக மனிதன் நடக்க எத்தனிக்கும்போது, தெய்வம் தான் உண்டு என்பதற்கு அத்தாட்சியும் காட்டிவிடுகிறது.

"வெய்ய வினையாய அடியார் மேலொழிக் கஇனி" என்னும்கேதீஸ்வரப் பதிகத்தைப் பாடிக்கொண்டும், கையிலுள்ள மணியைக்கிணுகிணுத்துக்கொண்டும் கர்ப்பூர ஆரத்தியை ஆரம்பித்தார் விசுவாசம். கர்ப்பூர ஒளியால் சிலையின் வளைவு நெளிவுகளுக்கிடையேயுள்ள இருட்டிடுகள் கூட மறைந்துவிடுகின்றன. பாடலின் முதலடிபாடி முடித்ததுதான் தாமதம் எங்கேயோ இருந்துவந்த சுழிக்காற்று கர்ப்பூரச்சுடரையும் மற்றும் விளக்குகளின் சுடரையும் அள்ளிக்கொண்டு போகின்றது எங்கும் ஒரே இருள். காற்றின்வேகம் திரும்பவும் ஒளியூட்ட எடுத்த முயற்சியை முறியடிக்கிறது. அதே சமயம் அவரின் வீட்டு 'கேற்'றில் ஜீப்வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. திகைக்குற்றவராய் கோவிலை விட்டு ஓடுகிறார் விசுவாசம். அந்த இருளின் நடுவேயும் உடைந்து சிதறிய தேங்காய்ச் சொட்டுகள் அவரைப் பார்த்துச் சிரித்தன. அவர் மகன் மறைந்து இருந்து யாரையோ தாக்கியதாக கைதுசெய்யப்படுகிறார். இங்கேகோவிலின் ஒலிபெருக்கியோ "கடவுள் ஏன்கல்லானார், மனம்கல்லாய்ப்போன மனிதர்களாலே" என்று பாடுவது சுற்றி நிற்கும் ஜனங்களுக்குத் தெளிவாகக் கேட்கிறது.

(யாவும் கற்பனை)

# நவமதிகள் பவனி வரும் தேவகுரு

மாயப்பிரபஞ்சம் — 9

சூரியனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கும் கிரகங்களுள், அதற்குசமீபமாகவுள்ள புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகியவற்றை உள்நிலைக்கோள்கள் என்றும், வியாழன், சனி, யூரானஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகியவற்றை வெளிநிலைக் கோள்கள் என்றும் சுகோள சாஸ்திரிகள் குறிப்பிடுகிறார்கள். இவ்விரு கூட்டங்களுக்கும் மத்தியில், அதாவது செவ்வாய்க்கும் வியாழனுக்குமிடையில் சுமார் மூன்றுகோடிமைல் அகலமான அண்டப்பரப்பில், பலலாயிரக்கணக்கான சிறு கோளத்திரள்கள் (Asteroids) சுற்றிக்கொண்டிருக்கின்றன. இவை இடைநிலைக் கோள்கள் எனப்படும்.

இச்சிறு கோள்களில் இட்டத்தட்ட 50,000 கோளங்கள் இருக்கின்றன. பூமியிலிருந்து கொண்டு இவற்றை நம் ஊனக்கண்களால் பார்க்கமுடியாது. தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலம் பார்த்தாலும் சுமார் முப்பது கோளங்களே தெளிவாகத் தெரிகின்றன. மற்றவை சிறு மின்மினிப் புள்ளிகளாகவே தோன்றுகின்றன;

இவற்றுள் மிகப்பெரிய நான்கு கோள்களுக்கு மட்டும் வானசாஸ்திரிகள் பெயர்வைத்திருக்கின்றனர் மிகப்பெரியது சீரிஸ் (Ceres). இதன் குறுக்களவு ஆக 485 மைல்களே. மற்றவை முறையே பல்லஸ் (Pallas) 304 மைல் குறுக்களவு, வெஸ்டா (Vesta)-243 மைல், ஜூனோ (Juno)-118 மைல், இவை ஏனைய கிரகங்களைப் போல உருண்டை வடிவாய் இல்லாமல் பல ஒழுங்கற்ற கோணல்வடிவங்களில் உள்ளன. இக்கோளங்கள் ஒன்றுக்கொன்று சமதூரத்திலுமில்லை. இருந்தாலும் இக்குழப்பத்திலும் ஓர் ஒழுங்கு உண்டென்றே சொல்ல வேண்டும். சனி கிரகத்தைச் சுற்றியிருக்கும் வளையங்களுக்கு இவற்றை ஒப்பிடுகின்றனர் சில விஞ்ஞானிகள்.

சிறுகோள்கள் சூரியனுடைய ஐந்தாவது வீதியில் காணப்படுகின்றன.

அப்பால் ஆறாவதுவீதியில் சூரியனுக்கு 48 கோடியே 20 லட்சம் மைல் தூரத்தில் வியாழன் (Jupiter) விளங்குகிறது. கிரகங்களுள் மிகப்பெரியதாகிய வியாழனை பிரகஸ்பதி என்றும், குரு என்றும் அழைப்பார்கள். வெள்ளி எனும் சுக்கிரன் அசுரகுரு, வியாழன் தேவகுரு. இது பூமியைவிட 1,350 மடங்கு பெரியது. இதன் குறுக்களவு 85,000 மைல்கள் இதன் எடை பூமியின் எடையைவிட 315 மடங்கு அதிகமானது.

வியாழன் சூரியனை ஒருமுறை சுற்றிவர ஏறக்குறைய பன்னிரண்டு வருடங்கள் பிடிக்கின்றன. அண்டவெளியில்வெகுதூரத்தில் இருப்பதால் பூமிக்கு கிடைக்கும் சூரிய வெளிச்சத்தில் 25-ல் ஒரு பங்குதான் வியாழனில் கிடைக்கும். எனவே இவ்வளவு பெரியதாயிருந்தும் எமது பார்வைக்கு வெள்ளியைவிட ஒளி குறைந்ததாகவே தெரிகிறது. வியாழன் தன்னைத் தானே சுற்றிவர சுமார் பத்துமணி நேரம்பிடிக்கிறது.

வியாழனைச் சுற்றி ஒன்பது உபகிரகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இவற்றுள் மிகப்பெரியதன் குறுக்களவு 3,550 மைல்களாகும்.

வியாழ மண்டலத்துக்கு அடுத்தாற்போல, சூரியனின் ஏழாம் வீதியில், சூரியனுக்கு 88 1/2 கோடி மைல் தூரத்தில் சனி (Saturn) கிரகம்

(10-ம் பக்கம் பார்க்க)

சுநாதன்

வட்டியுடன் இனும் !!
ரூபா 500/- ஐஞ்ஞூறுக்கு
வருடம் 7 சதவீத வட்டி கொடுக்கப்படும்.
இதை ஏழு நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்
ஒவ்வொரு மாதமும் அதிட்டமுள்ள ஒருவருக்கு
ரூபா 25/- இருபத்தைந்து
இனாமாகக் கொடுக்கப்படும்
மறு விபரங்களுக்கு!
தம்பி அன் கோ,
வண்ணார்பண்ணை.
மேற்குறித்த திட்டத்தின்படி சென்ற மாதம் அதிட்டமாக ரூபா இருபத்தைந்து (ரூ. 25/-) பெற்றவர்.
திருமதி S. முத்துப்பிள்ளை
திருநெல்வேலி வடக்கு.

# வயலில் அழகும் உழைப்போர் வாழ்வும் மலரும் மீசாலை!

## எங்கள் கிராமம் - 16

கு.வி.மகாலிங்கம்

சூரியன் நாள் முழுதும் உழைத்துக் களைத்து மேற்கு வானை நோக்கி விழுகின்ற மாலைப்போதில் மீசாலைக் கிராமத்து வயல்வெளியினிடையே கண்ணுக்கு ரம்மியமான காட்சியைக் காணலாம். மாரி காலத்தில் மழை நீருண்டு வாட்டமுடன் பயிர்பச்சைகள் எல்லாம் குளிர்மைவார்க்கும்.

மாலையில் வீடு செல்வதற்காக தோட்ட வெளியிலிருந்து தம்பதி சமேதராக விவசாயிகள் வரும் காட்சி அவர்கள் உழைப்பின் கொண்ட உண்மைப்பற்றை நமக்குச் சுட்டிக்காட்டவல்லன.

அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று தோட்டங்களில் பயறு, கத்தரி, வாகல், புடலை, உழுந்து ஆகிய பயிர்களுக்கெல்லாம் தண்ணீர் வார்த்து, மதியம் திரும்பி மீண்டும் அவர்கள் வெய்யில் உச்சியிலிருந்து கீழே இறங்கும்வரை வயலில் உழைப்பர்.

### மீசாலைக் காய்கறி

மீசாலைப்பகுதிக் கத்தரிக்காய், வெண்டி, பாகல், பயிற்றை, புடலை ஆகிய காய்கறிவகைக்குச் சாவகச்சேரிச் சந்தையில் நல்ல கிராக்கியுண்டு.

இக்காய்கறித் தோட்டங்களில், வலை அடிக்குளம், வெம்பிராய் கிராம்புலில், செற்புலவு ஆகியவை பிரசித்திபெற்றவை.

மாலையில் கணவன் கால் நடைகளுக்குரிய புல்லுக்கட்டுடனும் தண்ணீரிறைக்கும் பீலிப்பட்டை ஆகியவற்றுடன் பீடு நடை நடந்துவர அவர் பின்னே தன் வீட்டுக்கும் விற்பனைக்கும் தேவையான காய்கறிகளுடன் திரும்புவாள் மனைவி.

பிரிட்டிஷார் இலங்கையை ஆட்சி செய்த ஆரம்ப காலத்திலே அரசாங்க அதிபர் ஒருவர் மீசாலைக்கூடாகவுடு ஒன்றபோது இங்குள்ள காய்கறித் தோட்டங்களின் செழிப்பைக் கண்டு வியந்துள்ளார். அவர் அவ்விடத்து விவசாயிகளின் ஒரு வரை தோட்டத்தின் பெறுமதியைப்பற்றி விசாரித்தபோது இத்தோட்டங்கள் விலை மதிக்க முடியாதவை என்றாராம் விவசாயி. இவ்வாறு கூறியவர் கல்லடி வெட்டை நாகமுத்தர் என்ற ஒரு விவசாயி. இவர் ஒரு பரப்புக்குரிய பெறுமதியை மட்டிட முடியாதென்று கூறியதில் அர்த்தமுண்டு. இந்த ஊரில் சிறந்துள்ளதான ஆலடித் தோட்டத்திலேயே இத்தகைய சம்பவம் நடைபெற்றுள்ளது.

### மீசாலைக்கு முன்னிடம்

அரசாங்க விவசாயக் கண்காட்சிகளில் தென்மராட்சியில் மீசாலை எப்போதும் முன்னிடம் பெற்றுள்ளது. பணம் பண்டம் சேகரித்தல் கிழங்குவகை உற்பத்தி பழவகைக் கண்காட்சி ஆகியனவற்றில் முதலிடம் பெற்றுள்ளது. அந்தக் காலத்தில் கிராமத் தலைவர் திரு. கே. சதாசிவம் இத்தகைய போட்டிகளில் கிராமம் முன்னிடம் வகிக்க காரணராவார். இத்தகைய சிறப்புக்கு இங்குள்ள விவசாயிகளின் ஊக்கமும் முக்கிய காரணமாகும்.

### மீசாலைக் கிடுகு வண்டி

அதிகாலை யாழ்ப்பாணத்திற் காலையின் அமைதியை சாகடித்துக்கொண்டு 'டொக் டொக்' என்று மாட்டு வண்டிகள் யாழ்ப்பாணம் - நல்லூர் வீதியில் ஒலிப்பதைக் கேட்காதவர்கள் இருக்க முடியாது.

யாழ்ப்பாணத்திலுள்ள பல நடுத்தர வகுப்புக் குடும்பங்களுக்குடைய கூரை வீடுகளுக்குத் தேவையான தென்னங்கீற்றுகள் மீசாலையிலிருந்துதான் கொண்டு வரப்படுகின்றன; இவைமட்டுமல்லாமல் ஊமல் வண்டில், பானை, மட்டை ஆகிய எரிபொருட்களை ஏற்றிவரும் மீசாலை வண்டிகளையும் யாழ்ப்பாணத்திற் காணலாம்.

கிடுகைப் பின்னியே ஜீவனஞ் செய்வதுடன், வசதியான வாழ்க்கையையும் இத்தொழிலால் கொள்ளுவோர் இங்குளர். வறுகாய் பதனிடல், பனாட்டுத் தயாரித்தல், மாங்காய் வற்றல் தயாரித்தல், பனங்கட்டி செய்தல் ஆகியவற்றிலும் மீசாலை சிறப்புப் பெற்றுள்ளது. இப்பொருட்களை இங்குள்ள எவ்வகையினரும் பக்கத்திலுள்ள சந்தையில் கொண்டு சென்று விற்பதற்கு நாணுவதில்லை.

### பழம் பெருமைமிக்க ஆலயங்கள்

தென்மராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எதை தெரியாவிட்டாலும் சாவகச்சேரி வாரிவனநாதர் கோவிலைத் தெரியாமலிருக்க முடியாது. சாவகச்சேரிக்கு "வாரிவனம்" என்ற அழகான இலக்கியப் பெயருமுண்டு.

வாரிவனநாதர் ஆலயம் மிகப் பழமையும், தீர்த்த, மூர்த்தி விசேடத்தில் சிறந்ததுமான தலமாகும். யாழ்ப்பாண இராஜ்யத்தை ஆட்சி செய்த பரராஜசேகரன் என்னும் மன்னன் காலத்தில் பண்டைய நிலையிலிருந்து வாரிவனநாதர் ஆலயம் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது.

வாரிவனநாதர் கோவிலுக்கும் மீசாலை வடக்கு தட்டான்குள திருநீலகண்டப் பிள்ளையார் கோவிலுக்கும் சரித்திரத் தொடர்புண்டு.

வாரிவனநாதர் கோவிலுக்கு அண்மையில் யாழ்ப்பாண அரசன் விஜயஞ் செய்யும் சமயங்களில் தங்குவதற்கான மாளிகை ஒன்றுண்டு. மன்னன் மாளிகையிலைச் சேர்ந்த யானைகளைப் பாதுகாப்பதற்குரிய யானைப் பாகர்களின் இல்லங்கள் மீசாலை வடக்கு தட்டான் குளத்துக்கு அண்மையிலேயே தான் அமைந்திருந்தன. யானைப் பாகர்கள் அதிகாலையில் யானைகளை வாரிவனத்திலுள்ள இராஜ மாளிகைக்குக்கொண்டுசெல்வார்கள். மாலையில் தங்கள் இல்லங்களுக்கு அண்மையிலுள்ள கொட்டகைகளில் கட்டுவார்கள். இன்றைக்கும் இங்குள்ள காணிகளில் சிலவற்றிற்கு யானை கட்டிய காணியென்ற பெயருள்ளமையால் இவ்வுண்மை உறுதிப்படுகின்றது.

யானைக்கொட்டகைக்கு அண்மையிலுள்ள திருநீலகண்ட பிள்ளையார் கோவில் உற்சவத்தை யானைப்பாகர்களே நடத்திவந்தனர். உற்சவத்தின்போது இவர்கள் யானைமீதேற்றி உலாக்கொண்டு வருவதுண்டு. இரவு வேளைகளில் இது நடைபெறுவதனால் வெளியுலகிற்குத் தெரிந்திருக்கவில்லை.

ஒருமுறை அரசனுக்குரிய பட்டத்து யானை ஒன்றில் இரவு சுவாமியை வைத்து வீதிவலஞ்செய்வித்தனர். அன்றிரவு அந்த யானை தீர்த்தக்கேணியில் இறங்கியது. அப்படியே காணாமற்போய் விட்டது. அந்தக்கேணியில் யானை இறங்கியமையால் படிக்கட்டுகள் சில சிதலமாகியுள்ளன. ஆனால் தீர்த்தக் குண்டுக்குள் இறங்கிய யானையின் உடலையே அங்கு காண முடியவில்லை. இந்த அதிசய நிகழ்ச்சியினால் பயந்துவிட்ட பாகர்கள் மறுநாள் உதயத்தில் அரசனிடம் சென்று உண்மையை கூறினர்.

அரசனும் தீர்த்தக் கேணியை அண்மி விடயத்தை அறிந்துகொண்டான். பிள்ளையாரின் அருள் அதிசயம் என்று உணர்ந்த பரராஜசேகரன் அந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வித்து வைத்தான். அங்கு ஒரு தேரையும் நிர்மாணித்தான். காலப்போக்கில் இவ்வாலயத்தின் நித்திய நைமித்தியங்கள் குன்றத் தொடங்கின. இந்த நிலையில் இங்குள்ள தேரை கோவில் நிர்வாகிகள் மன்னன் குறிச்சியென்னும்பகுதியிலுள்ள ஆலயத்துக்கு விற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இந்தத் தேரைக்குறிப்பிட்ட இடத்துக்கு இழுத்துச் செல்கையில் தேர் அழுதது போன்ற ஒலிகளும் பிறந்தன. எனவே தேரை விலைக்கு வாங்கினவர்கள் அதனை குறிப்பிட்ட இடத்தில் நிறுத்திவிட்டு அகன்றனர்.

இவ்வேளையில் இக்கோவிலின் விக்கிரகமும் இரவோடிரவாக களவுபோயிற்று. கோவில் வளவிலுள்ள இருபனைகளின் ஒலைகளை முடிந்து அவற்றின் நடுவே படுத்திருந்த அம்பலவாணி என்னும் கள்வன் இரவு திருடிச்சென்றான். விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு தெற்குப் புறமாகச் சென்றான். அங்கே குறிப்பிட்ட வெள்ளை மாஞ்சோலையிலுள்ள ஒருவெள்ளை மாவிற்கு அப்பால் கொண்டு செல்லமுடியாது போகவே அந்த மாமரத்தின் கீழேயே விக்கிரகத்தை வைத்துவிட்டு அப்பால் சென்றுவிட்டான்.

விடிந்ததும் அம்மாஞ்சோலையை அடைந்த ஒருவரின் கண்ணில் இந்த விக்கிரகம் காணப்பட்டது. அந்த விக்கிரகத்தைக் கண்டவர்கள் குறிப்பிட்ட கோவிலுக்கு அதனை எடுத்துச் செல்ல முற்பட்டும் முடியாமற்போய் விட்டது. எனவே அம்மரத்தின் கீழேயே அதனைப் பிரதிஷ்டை செய்தனர்.

இக்கோவில்தான் இன்று மீசாலையில் பிரபலம் பெற்ற விக்கினேஸ்வர ஆலயமான திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோவிலாக உருப்பெற்றுள்ளது.

ஏறத்தாழ நூற்றாண்டுக்கு மேலாக மேற்படி தட்டான் குளம் திருநீலகண்ட பிள்ளையார் கோவில் முறையான பூஜை ஆராதனை நடைபெறாதிருந்து வந்தது கோவிலும் சிதலமடைந்து காணப்பட்டது. ஆனால் இது அண்மையில் புனருத்தாரணஞ்செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இம்மாதம் 15-ம் திகதி (இன்று) 45 நாட்களுக்கு நடைபெற்ற மண்டலாபிஷேகத்தின் பின்னர் இன்று சங்காபிஷேகம் நடைபெறுகின்றது.

கோவிலின் புனருத்தாரணப்பணிகளைச் செய்தவர் திரு. கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்களாவர். இவருடன் இவரது உறவினரும் பஞ்சாயத்தினரும் பங்குகொண்டனர்.

### மீசாலைக்குப் பெருமை தந்த வணிகர்

ஒரு நாட்டின் உணவுப் பசியைப் தீர்ப்பவர்கள் ஏர்கொண்டகாரர்கள்: அந்த நாட்டின் அறிவுப் பசியைத் தீர்ப்பவர்கள் அறிஞர்கள், புலவர்கள். ஆனால் இத்தகையாருக்கிடையில் வாழ்வுக்குவேண்டிய பொருட்களை விநியோகிக்கும் பணிகொள்பவர்கள் வணிகர்கள்.

'திரைகடல் ஓடியும் திரவியந்தேடு' என்கின்ற ஔவையின் அமுதவாக்குக்கமைய எங்கள் கிராமத்திலிருந்து கடல்கடந்து வணிகத்தை மேற்கொள்ளச் சென்றோர்கள் என்று யாம் இங்கு எவரையும் சுட்டிக்காட்ட முடியாது. ஆனால் பரந்து கிடக்கும் ஈழத்தின் பலதிசையும் வணிகநிலையங்களை வைத்திருப்போர் நம்மூரவரிற் சிலருளர்.

இவர்களுள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளவர் காலஞ்சென்ற மு. த. செல்லையா. இப்பெரியார் தமது இருபத்தொராவது வயதிலே கெக்கிராவைக்குச் சென்றுள்ளார். இவரது குன்றாத உழைப்பின் பயனால் தமது பெயரை கெக்கிராவை மு. த. செல்லையா என்ற விலாசத்திற் பொறித்துள்ளார்.

கெக்கிராவையில் உள்ள பிரபல்ய வியாபாரஸ்தாபனமாக மிளிர்வது மு. த. செல்லையா அன்சன்ஸ் என்னும் தாபனமாகும். கெக்கிராவையில் இவரது பெயரில் இன்னும் பல தாபனங்களும் [illegible] கெக்கிராவையில் [illegible] வரப்பெருமான் உருவாவதற்கு [illegible] கொண்டுள்ளவர்களில் ஒருவராக விளங்கினார். பொதுமக்களிடத்து குன்றாத அபிமானமும், நேசமும் கொண்ட இவர் கெக்கிராவைப் பட்டினசபையின் வட்டாரம் ஒன்றில் உறுப்பினரான துடன் தலைவராகவும் வந்துள்ள பெருமை பெற்றவர். கெக்கிராவையின் பட்டின சபையின் தலைவர்களுள் முதற்தமிழராக இவர் பதவி வகித்துள்ளார்.

இந்தப் பெரியாரால் எங்கள் மீசாலைப்பதி பெருமை அடைகின்றது. ஊரிலும் இவரது பெயரில் நெல்ஆலை ஒன்றுளது. இவ்வாலை தற்போது இவரது மைத்துனர் எம். ரீ. சுப்பிரமணியம் ஜே. பி. நிர்வாகத்திலுள்ளது.



### மீசாலை வஸ்தாது

யாழ்ப்பாணப்பகுதியிலுள்ளவர்கள் கச்சாயில் சின்னத்தம்பி என்ற ஒருவரைப் பற்றிக் கேள்விப்படாமலிருக்கமுடியாது.

இவர் ஒருபிரபலம்பெற்ற வஸ்தாது. உரமும் உற்சாகமுமுடைய தேகம் வாய்ந்தவர். ஒரு சமயம் இவரது உடல்பலம் பற்றிக் கேள்விப்பட்ட வேற்றூரைச் சேர்ந்த இருவர் இவரைச் சந்தித்து மல்யுத்தம் புரியும் நோக்குடன் வந்திருந்தனர். அப்போது சின்னத்தம்பி அவர்களை வரவேற்று அன்றுமத்தியானம் சாப்பிடும்படி அழைத்தார்.

அவ்வாறே அந்தப் பயில்வான்கள் இருவரும் அவருடன்சாப்பிடுவதற்கு வீட்டுக்குச் சென்றனர். சின்னத்தம்பி அவர்களுக்கு வாழையிலைகளில் சோற்றைப் படைத்து கறிக்குப்பதிலாக எள்ளையும் உடையாத தேங்காயையும் இலையில் வைத்தார். அவர்களுக்கு விடயம் விளங்கவில்லை. சின்னத்தம்பி அவர்களை உண்ணும்படி சொன்னார். அவர்கள் கறி

(11-ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்;
போன்: 330

# பஞ்சாமிர்தம்!

## யார் வறியவன்?

இளியனுக்கு ஆயிரம் ஏக்கர் உண்டு; எனக்கு ஒன்று கூட இல்லை.
இளியன் அரண்மனையில் வசிக்கிறான்; நான் ஒரு குடிசையில்
இளியன் லட்சத்தை ஆள்கிறான்; என்னிடம் ஒரு சதமுமில்லை
இளியன் தான் எம்மில் வறியவன்; நானல்ல
இளியன் இயற்கையில் எழிலைக் கண்டிலன்; நான் ஒரு மலரில் காண்பேன்
இளியன் கடலின், வானத்தின் இசை கேட்டிலன் நான் கணமும் கேட்பேன்
இருவரும் ஸ்தானங்களை மாற்றிக்கொள்வோமா?
ஒரு போதும் நான் மாட்டேன்

—சார்லிஸ் மாக்கே.

## ஆடு தந்த கோப்பி

சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு எதியோப்பியா (அபிஸீனியா) தேசத்தில் ஓர் ஆட்டிடையன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். திடீரென்று ஒரு மறி ஆடு அவனுக்கு முன்னால் வந்து நின்று துள்ளிக்குதித்து ஆடத்தொடங்கியது ஆடு இப்படி ஆவேசத்துடன் ஒரு நாளும் ஆடவில்லையே என்று அவன் ஆச்சரியப்பட்டான். சிறிது நேரம் செல்ல அந்த ஆடு விறுவிறென்று ஒரு மலைச்செடியிலுள்ள பழங்களைப் பறித்துத் தின்றுவிட்டு மறுபடியும் நர்த்தனம் புரிந்தது இதைக் கவனித்த இடையன் தானும் அம்மரத்தின் பழங்களில் சிலவற்றைப் பறித்துத் தின்றான். என்ன ஆச்சரியம்! அவனுக்கும் ஒரு போதை வெறி உண்டாகி துள்ளல் போடத் தொடங்கிவிட்டான் இவ்வற்புதச் செடியின் மகிமை ஊரெல்லாம் பரவியது. அராபியர் அப்பழங்களையும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அதற்கு 'காவா' என்று பெயரிட்டனர். துருக்கியர் அதை 'காஃவே' என்றழைத்தனர். வெள்ளைக்காரரின் வாயில் அது 'காஃவ்வி' யாகி, அவர்கள்மூலம் இந்தியாவுக்கு வந்தபோது 'காப்பி'யாகி, இலங்கையில் கோப்பியாக விளங்குகிறது.

## மேதாவிலாசம்

ஹௌடினி என்பவர் உலகத்திலேயே மிகச்சிறந்த மந்திரவாதி என்று பேர் வாங்கியவர். செய்தற்கரிய ஜால வித்தைகளையெல்லாம் செய்துகாட்டி பார்ப்பவர்களைப் பேராச்சரியத்தில் மூழ்கடித்துவிடுவார் சாதாரணமாக வீட்டில் நண்பர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் அவருடைய கையும் காலும் சும்மாவிடாது. கடதாசிக் கூட்டம் ஒன்றை தூக்கி வைத்துக்கொண்டு நண்பர்களோடு நடக்கும் சம்பாஷணைக்கு சற்றும் இடையூறில்லாமல், அதைத் தாறுமாறுகக் கலந்துவிட்டு, விரும்பிய சீட்டு கட்டத்துக்கு மேலே வரும்படி செய்வார். சீட்டுகளை அவர் பார்ப்பது போலவே தெரியாது. சம்பாஷணை முறியாது நடந்து கொண்டிருக்கும். பொக்கட்டிலிருந்து ஒரு கயிற்றுத் துண்டை எடுத்து அதில் பற்பல விதமான படுமுடிச்சுகளைப் போடுவார். பின் நண்பர்களுக்கு தெரியாமலேயே தமது சப்பாத்துகளை கழற்றி வைத்துவிட்டு, கால்விரல்களால் அந்த முடிச்சுகளை அவிழ்த்து மறுபடியும் கால்விரல்களாலேயே முடிச்சுகளையும் போடுவார். குனிந்து கால்களைப்பார்க்கவும் மாட்டார் 'மற்றவர்கள் நடப்பது, சுவாசிப்பது போல நானும் இந்த அப்பியாசங்களை செய்து கொண்டேயிருக்க வேண்டும்' என்று விளக்கம் தருவார். மேதைகளை உண்டாக்கும் அசுரசாதகம் என்பது இதுதான்.

## குட்டி நாய்கள்

கேர்ஸன் பிரபு இந்தியாவின் வைஸ்ரோயாயிருந்த போது திபெத்தின் மதத்தலைவர் ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவருக்கு ஒரு நல்ல பரிசு வழங்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. என்னவிதமான பரிசு கொடுத்தால் பொருத்தமாய் இருக்குமென்று லண்டனிலுள்ள வெளிவிவகாரகாரியாலயத்துக்கு கடிதம் எழுதினார் சேர்ஸன்பிரபு. 'திபெத்திலுள்ள பனிமலைகளில் உபயோகிப்பதற்கு நல்ல ஜாதி செல். பேர்னட் நாய்கள் ஒரு ஜோடிகொடுத்தால் பொருத்தமாயிருக்கும்' என்று பதில் வந்தது. இதைப் பார்த்த கேர்ஸன் பிரபுக்கு பொல்லாத கோபம்வந்துவிட்டது 'வெளிநாட்டுகாரியாலயத்தில் குட்டிநாய்களுக்குகுறைவில்லை' என்று அந்தக் கடிதத்தில் குறித்துவிட்டு பைலைத்தூக்கி ஒரு மூலைக்குள் வீசினார்.

## சுடச்சுடச் சேவை

நண்பர் ஒருவர் சில உடுப்புகளை சலவைச் சாலையில் போட்டுவிட்டு ரசீது பெற்றுக்கொண்டார் அடுத்தநாள் அவர் அவசரஜோலியாக வெளிதேசம் போக நேரிட்டுவிட்டது. இரண்டு வருடங்கள் கழித்துதான் திரும்பினார் ரசீது அவரிடம் இன்னும் இருந்தது. ஆனால் உடுப்புகள் இருக்குமோ என்று சந்தேகம். எதற்கும் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்து ரசீதுடன் சலவைச்சாலைக்குப் போனார். என்ன ஆச்சரியம்! உடுப்புகள் பத்திரமாய் இருந்தன. தருகிறீர்களா என்ற மகிழ்ச்சியுடன் பேர்சில் கைவைத்தார் நண்பர். 'இன்னும் சரியாக ஒரு வாரம் கழித்துவாருங்கள்' என்று சொன்னார் கடைக்காரர்.

தயாரிப்பு: வழிப்போக்கன்.

---

### கிழக்கு வங்க மக்களின் அவலக்குரல் - 3

# கிழக்கு - மேற்குப் பாகிஸ்தான் ஒற்றுமைச் சின்னம் முஜிபுர்

## "எனது கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் நக்சல்பாரிகளிடம் தலைமைப் பதவி பறி போகும்"

கப்பல் நிறைய துருப்புக்கள் சிட்டாகாங் துறைமுகத்தை வந்தடைந்தன. ஆனால், கப்பல் சரக்கு இறக்குமதிக்குப் பொறுப்பாளர்களும், பொருட்களை ஏற்றுவோரும் கப்பலிலுள்ள பொருட்களை இறக்குவதற்கு மறுத்தனர். கிழக்குப்பாகிஸ்தான் ரைபிள் படை, வங்காள ரைபிள் படை, கிழக்குப்பாகிஸ்தான் போலிஸ் படை ஆகியவை தங்கள் சொந்த மக்களை அடுவதற்கு மறுத்தனர். இதனால் இவர்கள் பாகிஸ்தான் இராணுவத்தினரால் நிராயுதபாணிகளாக்கப்பட்டனர். முஜிபுரின் ஆறம்சக் கோரிக்கை பற்றி பூட்டோவின் "நியாயமற்ற நிலை" மேற்குபாகிஸ்தானில் மக்கள் கட்சிக்குள் ஏற்படுத்திய வேற்றுமையை லாகூரிலிருந்து வெளிவரும் கோகிஸ்ரன் பத்திரிகை வெளியிட்டது.

### கிழக்கு மேற்கை இணைப்பார் முஜிபுர்

மேற்கு கிழக்குப் பாகிஸ்தான்களின் ஒற்றுமையை தொடர்பு படுத்திக்கொண்டிருப்பவர் முஜிபுர் என்றும், சனத்தின் மாற்றத்தில் முஜிபுரை இழந்துவிட்டால் பாகிஸ்தானின் ஐக்கியத்தை யாராலும் காப்பாற்ற முடியாதெனவும் மார்ச் மாதம் 11-ம் திகதி எயர் மார்சல் அஸ்ஹர்கான் அரசாங்கத்தை எச்சரித்தார். மௌலானா பாசானியும், அவாமி லீக்கில் இருந்த தீவிரவாதிகளும் சுதந்திரப் பிரகடனம் செய்யுமாறு வலியுறுத்திய ஒன்றே இவ்வுண்மையை எடுத்துக்காட்டப் போதுமானது. மேற்குப்பாகிஸ்தான் பொருட்கள் அனைத்தையும் பகிஷ்கரிக்குமாறு கிழக்குப்பாகிஸ்தான் ...க்களை 'வங்காள மத்திய மாணவர் நடவடிக்கைக் கமிட்டி' கேட்டுக்கொண்டது.

### தீயவிளைவுகளை ஏற்கவும் தயார்

வெள்ளிக்கிழமையன்று எல்லாப்பாதுகாப்பு ஊழியர்களும் கடமைக்குத் திரும்ப வேண்டுமென்றும், திங்கட்கிழமையிலிருந்து வேலைக்கு சமூகமளிக்காவிட்டால், அவர்கள் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டிவருமென்றும் இராணுவ ஆட்சியினர் உத்தரவு பிறப்பித்தனர். இந்த உத்தரவு ஓர் ஆத்திரமூட்டும் செயலென முஜிபுர் கூறினார். எனது மக்கள் தங்கள் உரிமையைப் பெறவேண்டும். எனது கோரிக்கை முதலில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். எனது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டபின் வங்காள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய தீவிர உணர்ச்சியை கட்டுப்படுத்தும் பொறுப்பை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நல்லவற்றில் நம்பிக்கை வைப்போம் ஆனால் இதையொட்டி பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டாலும் அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். மக்கள் கட்டாயப்படுத்தலுக்குப் பணிய மாட்டார்கள் என்று வீரகர்ஜனை புரிந்தார்.

மாகாண சட்டசபையில் அறுதிப்பெரும்பான்மை பலமும் தேசிய சட்டசபையில் மேல்நிலையும் தனது கட்சி பெற்றிருப்பதினால், வங்காள தேசத்தின் நிர்வாகத்தைத் தான் எடுத்துக் கொள்வதாக மார்ச்மாதம் 15-ம் திகதி திங்கட்கிழமை முஜிபுர் அறிவித்தார். மக்களின் அன்றாட வாழ்வுக்கும், இராணுவ ஆட்சிக்கும் எதிரான மக்கள் இயக்கம் சுமுகமாக இயங்கக்கூடியதாகவும் இருக்கக்கூடிய நடவடிக்கைகளடங்கிய 35 அம்சங்கள் கொண்ட அறிக்கை ஒன்றை விடுத்தார். இந்த நடவடிக்கை சிலமணிநேரத்தில் ஜனாதிபதி யாஹ்யாகானை டாக்காவிற்கு வரச்செய்தது. டிரக்குகள் நிறைந்த துருப்புக்களின் பாதுகாப்புடன் மாலையில் அவர் டாக்கா வந்தடைந்தார். யாஹ்யாகான் தங்கியிருந்த ஜனாதிபதியின் இல்லம் மெசின்கன்களால் பாதுகாக்கப்பட்டது.

இந்தச்சமயத்தில் தொடர்ந்து மக்களுக்கும் இராணுவத்திற்குமிடையேற்பட்ட மோதல்களின் காரணமாக கராச்சிக்குச் செல்லும் சகல படகுகளும் எரிக்கப்பட்டன. சுதந்திர வங்காள கோரிக்கை வானளாவ ஒலிக்க ஆரம்பித்தது. மக்கள் எழுச்சி உத்வேகம் பெற ஆரம்பித்தது சுதந்திர பிரகடனமின்றியே முஜிபுரின் நடவடிக்கைகள் கிழக்கு வங்காளத்தை சுதந்திர நாடாக்கியது. யாஹ்யாகானுடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்தக்கூட அவருக்கு அவகாசம் இருக்கவில்லை

### கி. பாக்கை கம்யூனிசத்திலிருந்து நானே காப்பாற்றுவேன்

ஏ.எப்.பி. நிருபர் பிரியன் மேக்கு, பின்பு முஜிபுர் அளித்த பேட்டியின் பொழுது இவர்களுக்கு நான் விட்டுக்கொடுத்தால் - அதிகம் சலுகைகளை யாஹ்யாவுக்குச் செய்தால் என்தலைமைப்பதவியை இழந்துவிடுவேன், நான் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறேன்" என்று (மார்ச் 25) தெரிவித்தார். இதே பேட்டியில் பிரியனிடம், கிழக்குப் பாகிஸ்தானை கம்யூனிசத்திலிருந்து நான் ஒருவனே காப்பாற்ற முடியுமென்றும் தனது சுயாட்சிக்கோரிக்கையை மேற்குப் பாகிஸ்தானியர் எதிர்த்தால்; சில வருடங்களில் தனது தலைமைப்பதவி நக்சல்பாரிகளிடம் பறிபோய்விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

முஜிபுர், யாஹ்யா பேச்சுவார்த்தை மார்ச் 16-ம் திகதி காலை ஆரம்பமாகியது. மக்கள் கூட்டம் வங்காளதேச கோஷத்தை எழுப்பின. மாணவர்கள் 'முஜிபுர், எங்களை உதாசீனப்படுத்திவிடாதே' என்று கோஷமிட்டனர். இதைத் தொடர்ந்து மறுநாள் மார்ச் 1-ம் திகதிக்கும் 9-ம் திகதிக்குமிடையில் சிவில் நிர்வாகிகளுக்கு இராணுவம் உதவி அளிக்க வந்த தற்கால சூழ்நிலைகளை ஆராய்வதற்கு விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைக்கப் போவதாக திக்காகான் அறிவித்தார். இதனை முஜிபுர் முற்றிலும் நிராகரித்து 'இது மக்களை ஏமாற்றும் ஒருவழி' எனக் கூறியதோடு சிட்டாகொங்கிலும் மற்றும் பகுதிகளிலும் அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் சம்பவங்களை விசாரணை செய்ய மூவர்கொண்ட விசாரணைக் குழு ஒன்றை தாமே நியமித்தார். திக்காகான் விசாரணைக் கமிஷனை புறக்கணிக்குமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டார். விசாரணையின் நியந்தனையின் பேரிலும், திக்காகானுக்கு அளித்த அறிக்கையின் அடிப்படையிலும் அவர் இந்த எதிர்ப்பைத் தெரிவித்தார். அரசியல் காரணங்களுக்காக மக்களுக்கெதிராக இராணுவம் பயன்படுத்தக் கூடாதென்ற அடிப்படைக் கருத்தை இவ்வறிக்கை கொண்டிருக்கவில்லையென்றும் முஜிபுர் தெரிவித்தார்.

### பூட்டோ கருத்து மாற்றம்

மூன்று நாள் சமாதானப் பேச்சுவார்த்தையைத்

(11ம் பக்கம் பார்க்க)

தமிழாக்கம்: மயிலை

வைத்தியர்களுக்கு
ஆயுர்வேத மருந்துக்கூட்டு சபை
(CEYLON AYURVEDIC DRUG CORPORATION)
இறக்குமதி செய்து விநியோகிக்கும் மருந்துச் சரக்குகளும்
நாவின்ன
ஆயுள்வேத ஔடதசாலை
(AYURVEDA DRUG FACTORY)
தயாரிப்பு மருந்துகளும் அறிமுகஞ்செய்யப்பட்ட பேரில் கட்டுப்பாட்டு விலைகளில் யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
73; மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

— 23 —

சாப்பிட்டு முடிந்ததும் சோமு வெளியே வந்து பார்த்தான். கோவிந்தன் இதற்கிடையில் வைத்தியசாலையை நோக்கி வெகுதூரம் போயிருப்பான். ஆயினும் இங்கே சோமுவினுள்ளே, கோவிந்தனின் உலக சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்ட உபசரிப்பு 'குளுகுளு' என்று குளிர்ந்துகொண்டிருக்கிறது.

வெட்பமாக வீசியகாற்று, சோமுவின் உடலைத் தழுவி உள்ளேயும் இறங்கிற்று. உள்ளே முண்டியடித்த ஆவல் மறுபடியுந் தலைதூக்குகிறது.

எழுதியதை ஒருதடவை வாசித்துப் பார்ப்போமா?'

சோமு உள்ளேபோகிறான். பாய்ச்சுருளின் மேல் சட்டையின்கீழ் அடங்கியிருந்த புத்தகம் அவன் கையில் ஏறுகிறது. ஒருகாலத்தில் அவன் மனத்தை அழுத்திக் கனத்துக்கொண்டிருந்த ஏதோ ஒன்று, அந்தப் புத்தகத்துட் புகுந்துவிட்ட காரணத்தாலோ என்னவோ, புத்தகம் அவன் கையில் பெரும் பாரமாய்க் கனக்கிறது!

முற்றத்தின் ஓரத்தில் நிழல் செய்து நின்ற வேப்பமரத்தின்கீழ், அம்மரத்தில் சாய்ந்து இருந்துகொண்டே சோமு புத்தகத்தைத் திறக்கிறான்.

குருவே உங்களுக்கு வணக்கஞ் செலுத்துகிறேன். நீங்கள் சொன்னவற்றிலே பொதிந்திருந்த உண்மைகளை, நீங்கள் என்னை விட்டுப் போனபிறகுதான் முழுமையாக உணருகிறேன்.

நான் யாராக இருந்தாலும், என்பழைய வாழ்வு எதுவாக இருந்தாலும் அதைப்பற்றி நீங்கள் அக்கறை செலுத்தாத காரணமும் இப்பொழுதுதான், நான் உங்களிலே சார்ந்திராமல் சுயமாகச் சிந்திக்கிற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தபோதுதான், நன்ருகப் புரிகிறது. பழமையிலே காலை ஊன்றிக்கொண்டு அதன் காரணமாய்க் காளான் போல உள்ளே முளைத்துக்கொண்டிருக்கிற வெறுப்பு வெறுப்புக்களுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில், நானே மற்றவனே [illegible] புதிதாக ஒருபாதையை வகுத்துக்கொள்ளுதல் இயலாத காரியம் என்பதை இந்த இரண்டொரு நாட்களில் தான் என்னால் பூரணமாக உணரமுடிகிறது.

'தன்னைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறவன் தங்கிவிட்ட நீர்போலத் தன்னுள்ளே புழுக்களும், பூச்சிகளும் நெளிய நாற்றமெடுத்துவிடுகிறான். மற்றவனைப்பற்றி - இறந்தகாலத்தைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறவனும் அதுபோலவே தேங்கிநின்று தனக்குத்தானே நாறுகிற நிலையில் முன்னேறிக் ஓரடி எடுத்து வைக்க முடியாதவனாகிறான்' என்று நீங்கள் சொன்ன வார்த்தைகள், இன்றுதான் என் மனக்காதுகளில் முழுமை பெற்று ஒலிக்கின்றன.

இந்த ஒலிபரப்பின் கம்பீரத்தில் என்னுள்ளே பிறக்கிற உந்தல் என்னை இமயத்துக்கும் மேலே உயர்த்திவிடுகிறது. ஆனாலும் நீங்கள் இழிவுபடுத்தாமலே, இழிவுபடுத்திக்காட்டிய இறந்தகாலம், கீழே நின்று அடிக்கடி தன் அழுக்கு நிறைந்த கரத் தலையை நீட்டிக் காட்டுகிறது.

அம்மா இறந்து, இறந்தகாலத்தோடு ஐக்கியமாகிவிட்டாள். அப்பாவும், இறந்தோ — இறவாமலோ இறந்தகாலத்து மனிதர் ஆகிவிட்டார். ஆனந்தன்கூட என்னளவில் இறந்தகாலத்தவன். நீங்கள்கூட என் குருவே, என்னை மன்னித்துக்கொள்ளுங்கள், இறந்தகாலத்து மனிதர்தாம். இது உங்கள் வாக்கின்படி - உங்கள் கட்டளையின்படி. உங்களைக் குருவாய் வரித்துக் கொண்ட சந்தர்ப்ப வசத்தால் என்னுள் தோன்றியிருக்கும் ஏற்பாட்டின்படி.

ஆனாலும் இறந்தகாலம் என்னுள்ளே இலந்தை முள்ளாய்க் கீறிய கீறல்கள், குடுக்கள் ஆறிவிட்டாலும் என்னைத் 'திருடன்' என்று எத்திய குத்தல் இன்னும் உள்நெஞ்சிலே கடுப்புக் காட்டி, [illegible] செய்துகொண்டிருக்கிறது.

இதை ஆற்றுகிற மருந்து, நான் 'திருடன்' இல்லை என்று உலகம் அறியச்செய்வதுதான் என்று உங்களைக் காணமுன்னர் எண்ணியிருந்தேன். ஆனால் உழுத்துப்போன சில சம்பிரதாயங்களிலே, ஒருவனது பொருளாதார பலத்தோடு அவனது நடத்தையைக் கணித்துப் பார்க்கிற பழக்கத்திலே மனிதனாய் இருக்கிறதற்காக ஒருவனை மதிக்காமல் அவனிடமிருக்கிற செல்வத்துக்காக அவனை மதிக்கிற பொய்மையிலே ஊறிப்போய்க் கிடக்கிற இந்த உலகம் என்னைத் 'திருடன்' என்றுசொல்ல. 'கொலைஞன்' என்றுசொல்லவ அதைப்பற்றி அக்கறையே கொள்ளாத நிலைக்கு நான் வந்துவிட்டேன்.

[நான் இந்த நிலைக்கு வருகிறதற்குக் காரணமாயிருந்தவர், என்னோடிருந்து என்னை வழிநடத்திய மூன்று வருடகாலத்திற்குள் என்னுள்ளேயிருந்து கடுப்புக் காட்டிக்கொண்டிருந்த இந்தமுள்ளை வெளியே எடுத்து எறிவதற்கு முயலவில்லை. அந்த முள் தானாகவே கழன்று விடும் என்று கருதினாரோ!]

அந்த முள்ளை எடுத்து வெளியே எறிந்துவிட்ட பிறகுதான் குருவே, நீங்கள் காட்டிய பாதையில் முழு மூச்சோடு முன்னேற முடியும் என்ற எண்ணத்தில் நான் பின்னால் எழுதுகிறதை நீங்கள் எப்பொழுதாவது அறியவோ படிக்கவோ நேர்ந்தால் இதை எழுதி ஒருமுறை படித்துவிட்ட பிறகு பழைய நினைவுச் சேற்றிலிருந்து விடுபட்டுத் தடைகளேயில்லாத சமதரையில் நான் வெகுதூரம் போயிருப்பேன் என்று எண்ணிக்கொள்ளுங்கள்.

குருவே, மறுபடியும் மறுபடியும் உங்களுக்கு வணக்கஞ் செலுத்துகிறேன்.

# 'ஏகாலியா' எனப் பெயர் வந்த காரணம்

**மக்கள் கவி மணி மு. இராமலிங்கம்**

சேரன். சோழன், பாண்டியன் என்னும் இராசாக்கள் உலகத்தைக் கண்ணிருந்து செங்கோலோச்சி வருங்காலத்திலே, மனிதரெனப்பட்ட சகலரும் சாதிபேதமென்னும் வேற்றுமையில்லாமல் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த சகோதரரைப் போலொருமித்து ஒருவர்க்கொருவர் பெண்கொண்டும் கொடுத்தும் வந்தார்கள். இப்படியிருக்க ஒரு நாள் சோழ இராசன் தனக்குமுன் சேவுகம் நிற்கும் இரணவீரர்களில் ஒருவனைப் பார்த்து தனக்கொரு பெட்டி செய்து கொடுக்கும்படி தச்சனை அழைத்து இதோ சீக்கிரம் வாவென்றனுப்ப, அத்தலையாரியோ தொழில் வினைஞரனைவரும் குலபேதமின்றிக் கலந்திருந்தபடியால் தச்சனென்றறியாமல் வெகுநேரமலைந்தலைந்து கடைசியாக ஒரு தச்சனைப் பிடித்து இராசனுக்குமுன் கொண்டுவந்துவிட்டான். இராசாவோ தலையாரியைப் பார்த்து இந்நேரஞ் சென்ற காரணம் யாதென வினவ அந்தத் தலையாரியோ அரசனைப் பார்த்து எல்லோரும் தொழில் வினைஞரெல்லோரும் தங்கடங்கள் மரபு முறையாகக் கட்சி கட்சியாயிராமற் கும்பலாய்க் கலந்து கலந்திருந்ததால் தச்சனென்றறிந்து அழைப்பதற்கு இந்நேரஞ் சென்றதென்றான். இராசன் இதைச் செவியுறக் கேட்டு ஓகோ! தொழிலாளிகளனைவருங் குலபேதமின்றி ஒருமிக்கக் கலந்து செறிந்திருப்பதினாலல்லோ அவசரத்துக்கு வேலைகாரர் கிடையாமற்போனது. ஆகையால் இதை விலக்க ஒரு சூட்சஞ் செய்யவேண்டுமென்றெண்ணித் தச்சனை ஒரு வீதியிலும் தட்டாரைப் பின்னொரு வீதியிலும் இப்படியே அந்தந்தச் சாதியாரை அந்தந்த வீதியிலிருக்கும்படி ஒரு கட்டளையை நிருபித்து இக்கட்டளையைச் செப்புத் தகட்டில் வரைந்து அதற்கு யாவரும் கையொப்பம் வைக்கவேண்டுமென்று கட்டளை பண்ணினார். அப்பொழுது குடிகள் ஆனவரும் இதொரு நல்ல சட்டமென்றெண்ணி அரசன் கட்டளைப்படி கையெழுத்து வைத்த பின்பு, பறையர் கடைசியடிக்கோத்திரமென்றெண்ணி அந்தச் செப்புத் தகட்டிலெல்லோருடைய கையெழுத்திற்கும் முன்னே தங்கள் கையெழுத்து நிற்கவேண்டுமென்று போராடினார்கள். அதற்கு மற்றக் குடித்தனக்காரர் ஒத்துக் கொள்ளாதுபோனதால் அரசன் பறையரைப் பார்த்து எல்லாருடைய கையெழுத்திற்கும் கீழே உங்கள் கையெழுத்து நிற்கவேண்டியது. ஆகையால் என் கட்டளைக் கிரண்டு பண்ணாதையுங்களென்று சொல்லியும் பறையர் இராசகட்டளையை மீறினபடியால் அவர்கள் இது முதற்கொண்டு இனிமேல் தன் கண்ணில் விழிக்கப்படாதென்றும் ஊரில் வரும் வருமானங்களில் அவர்களுக்குக் கொடுக்கப்

படாதென்றும் செ
அவர்களைத் தூரத்திவிட
சிறைநாட் செல்லப்பின்
புதமும் இரணவீரர்
வாளுருவி நிற்கவும்
பிரதானி முதலிய
பதிகள் வாய்பொத்தி
டவைகள் கேட்கவும்
ரக் கொலுவிலெழுந்
யிருந்த சோழ இரா
குப் பார்ப்பான் ஆ
தஞ் செபிக்க வந்
அரசன் நம்முடைய
யர் எப்படியிருக்
கென்று வினவப்
பான், மகாராசனே,
என்ன சொல்லுவேன்
கொடியர் செய்த
தொழிலைக் கேட்டால்
கூசுதே. சொல்ல ந
புரளுகுதில்லையே என
உடனே அரசன் தி
தெழுந்து கோவை
போல் இரு கண்களு
ஜொலிக்க இவந்து
கோபத்துடனே
பார்ப்பான் ஐயா,
கள் செய்த மாட்
தின்கிறார்களென்றான்
காரியம் உண்மை
இராசனும் காட்சிப்
ணமாய்க் கண்டு
ரையும் அவர்கள்
யும் அக்கினிக்கிரை
படுகுரணம் பண்ணு
கட்டளை கொடுத்தார்
தக்கட்டளையைப்
தலைவர் முதலிய
சேவகர்களெல்லாரும்
மேற்கொண்டு இரண்டு
பறைச்சேரியை நாள
சமுஞ் சூழ்ந்து
கொள்ளி வைக்க
பார்த்து நின்றார்கள்
தச் சமயத்தில்
னெழுகிற வண்ணா
ஸன் அழுக்குப்புட
எடுக்கப் பறைச்சே
போகிருந்தவிடத்தில்
யர் சகலருக்கும் எ
யிருக்கின்ற பறையனு
மனைவி பூரண கர்ப்
ரீயாயிருந்து வண்
கண்டு அவனிடம்
[illegible]
சொல்லி அக்கினிக்குத்
காப்பாற்றும்படி
வேண்டிக் கொண்ட
அந்த வண்ணான்
மிரங்கி அவளை
அழுக்குமூட்டையிற்
கட்டித் தூக்கிவெ
தோள்மேற் போட்
கொண்டு கையிலே
பொன்று பிடித்துச்
விட்டுப் புறப்படு
பறைச் சேரியை மு
போட்டுக் கொண்டி
இரணவீரர்கள் இவனை
டோடிப்போய் நீ ய
னென்றுருக்கி
அவனே நான் அழுக்
வெழுத்துப்பிழைக்கு
காலியென்று செ
கொண்டுபோனான். ஏ
யென்றதென்ன வெ
கெர்ப்பஸ்திரீ காலிர
கெர்ப்பத்திலிருக்கிற
காலிரண்டும், வ
காலிரண்டும் ஆக
காலோடே கையிலே
தடியைக் கூட்டி நால
காலியென்றான். ஆன
'ழ' கரங்கெட்டு
யென்றழைக்கப்பட்ட
[உதாரணம் 28-5
பக். 71]




சுப்பையர் தாராளமானவர். தாராளம் என்றால், மற்றவனையும் தன்னைப்போல் மதிக்கிற பெருமையோடு சேர்ந்தது. நான் அறிந்தவரையில் எனக்கும், கோவிந்தனுக்கும், தம்பி தியாகுவுக்குமிடையில் எந்தவித வேறுபாடும் அவர்காட்டியது கிடையாது. அப்படிக் காட்டத் தெரியாதவர் அவர்.

அவருக்கு இருந்த ஐந்து ஏக்கர் வயல் நிலம் அத்தனை வரப்பானதல்ல. இந்த வயலை நம்பி மூத்த இரண்டு பெண்பிள்ளைகளும், இளைய ஆண்பிள்ளைகள் இருவரும் வளர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவரும், அவர் மனைவியும் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களோடு நானும் போய்ச்சேர்ந்து, அந்தக் குடும்பத்தில் ஒருவனாகி ஒன்றிவிட்ட காலத்திலே, அங்கு என்ன நடக்கிறது, என்ன நடக்கப் போகிறது என்பதை, அம்மாவோடு நான் இருந்து பெற்ற அனுபவத்தின் பின்னணியிலே என்னால் காணக்கூடியதாக இருந்தது.

பிள்ளைகள் வளர்ந்துகொண்டிருக்கிறார்கள் பெரியக்காவும் சின்னக்காவும் கல்யாணத்தை எதிர்பார்க்கிற வயதுக்குள் புகுந்துவிட்டார்கள். குடும்பத்தில் நானும் ஒருவனாகிவிட்டேன். குடும்பமும் ஓர் அங்கத்தவனால் அதிகரித்தது. செலவுகளும் ஒருபங்கு கூடுகிற கட்டத்தில், சுப்பையர் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கடன்பட ஆரம்பித்திருந்தார். இது எங்கேகொண்டு போய்விடும் என்று வஞ்சனையே இல்லாத அந்த மனிதர் அறியாவிட்டாலும், சிறியவனான எனக்கு, பயங்கரத்தை விளைவிக்கும் கருவில் அது தெரிகிறது.

இத்தனை காலமாய் அவர் மானியாய் வாழ்ந்திருக்கிறார். இப்பொழுது, ஊரையே கழுத்தைப் பிடித்து அழுத்துகிற வாழ்க்கைச் செலவு இந்தக்குடும்பத்தையும் உலைத்துவிடத் தவறவில்லை.

தங்கள் வயலிலே மட்டும் வேலைசெய்து வாழ்ந்துகொண்டிருந்த குடும்பம், இந்தக் காரணங்களால் வெளியே சென்று வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அம்பலவாணர் நல்லமனிதர் என்று அந்த வட்டாரம் முழுவதும் பேச்சு. அவருக்கு இருந்த ஏராளமான நெற்காணிகளில் வேலைசெய்ய நூற்றுக்கணக்கானவர்கள் தேவை. மனிதர் தாரதம்மியமின்றி, தாராளமாகக் கூலி கொடுப்பார் என்ற பெருமைக்கு ஆளானவர். எங்கே, யாரைச் சுரண்டலாம் என்றிருக்கிற பெரிய காணிக்காரர்களுக்குள்ளே இவரைத்தான், சாதாரண ஐந்து ஏக்கர், மூன்று ஏக்கர் விவசாயிகளும் கூலிவேலை செய்கிறவர்களும் மதித்தார்கள்.

எங்கள் குடும்பமும், அம்பலவாணரின் வயல்களிலே வேலைசெய்து, குடும்பத்து வருமானத்தை அதிகரிக்க முனைந்தது. வழமையாகப் பெண்களே செய்கிற வேலைகளில், எங்கள் குடும்பத்து நான்கு ஆண்கள் ஈடுபட்டு உழைத்தபோது கடன்படுகிற வேதனை அற்றுப் போயிற்று.

ஒருநாள், முழங்கால்வரை மூடியிருந்த தண்ணீருள் நின்று நாங்கள் களை பிடுங்கிக்கொண்டிருக்கிறோம். எனக்குப்பக்கத்தில் கோவிந்தன். கொஞ்சம் பின்னால் தம்பி தியாகு ஐயா (சுப்பையர்) கொஞ்சத் தூரத்தில் குனிந்து நின்று வேலை செய்கிறார்.

இரண்டு மூன்று பாத்திகளுக்கு அப்பால், முழங்கால் வரை மடித்துக் கட்டிய வெள்ளை வேட்டியோடு, செல்லமாக வளர்ந்துவிட்டிருந்த தொந்தியை ஓரளவு எடுத்துக்காட்டுகிற அரைக்கை பனியன் அணிந்த அம்பலவாணர் வரம்பின்மேல் நடந்து வந்துகொண்டிருக்கிறார். தலையிலே வெயிலுக்காகக் கட்டிய வெள்ளை வெலேர் என்ற சால்வை மெல்லிய காற்றிலே அசைந்தாடி அம்பலவாணருக்கு ஒரு கம்பீரத்தைத் தருகிறது.

வயது அவ்வளவாக இல்லை. நாற்பதைத் தாண்டி, ஐம்பதுக்குள்ளிருக்கும். அரசாங்கத்தில் ஏதோ உத்தியோகமாய் இருந்து சின்ன வயதிலேயே 'பென்சன்' எடுத்தவர் என்று கதைத்துக்கொண்டார்கள்.

ஆவரசங்குளத்திலும் அவருக்கு ஒரு வீடு இருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறபோதெல்லாம் அந்த வீட்டில் சில தினங்கள் தங்கியிருப்பார். அவரிடம் நிரந்தரமாக வேலை செய்கிற இரண்டு மூன்று பேர் அங்கே குடியிருந்தார்கள்.

விதைப்பு, நாற்று நடுதல், களைபிடுங்கல், வெட்டுதல், மிதித்தல் ஆகிய வைபவங்கள் நடைபெறுகிறபோதெல்லாம் அந்த வீட்டிலே திருவிழா ஒன்று நடைபெறுவது போலிருக்கும். கூலிவேலை செய்கிறவர்கள் வருவதும் போவதும் இருட்டுகிறவரையில் ஓயாது.

நான் இங்கு வந்துசேர்ந்த ஏழுஎட்டுமாதங்களுக்கிடையில் அம்பலவாணரைப் பற்றி அறிந்தவை பல.

"பணத்துக்குப் பணமிருக்கு, குணத்துக்குக் குணமுமிருக்கு. அந்த மனுஷர் ஒரு மகான்" என்று அவரைப் பற்றி ஐயாவே அடிக்கடி சொல்லக்கேட்டிருக்கிறேன்.

இன்று, வரம்பிலே வந்துகொண்டிருக்கிற அம்பலவாணர் அங்குமிங்குமாக நின்று களைபிடுங்கிக்கொண்டிருக்கிறவர்களைப் பெயர் சொல்லி அழைத்துச் சுகம் விசாரித்தார். யாரோ ஒருவனைப்பார்த்து, "உன்குழந்தையைவிட்டுக்கொண்டு வந்திட்டியா?" என்று கேட்டார். வரம்போரத்திலே நின்று வேலைசெய்துகொண்டிருந்த இருவரின் தலைகளைத் தடவிப்புன்னகைசெய்தார்.

நாங்கள் வேலை செய்து நின்ற பாத்தியை அவர் அணுகும்போது, அவரை வரவேற்கிற தோரணையில் எங்கள் கைகள் களைகளை வேகமாகப் பிடுங்கின.

"சுப்பையர், ஒரு விசயம்".

எல்லோரும் நிமிர்ந்து அவரையே பார்க்கிறோம்.

(வளரும்)

## ஒத்து வாழலா

இயற்கையோடு ஒ
வாழ் என்கிறார்க
அது தேகத்துக்கு
சாவுக்கு வழி;
வீட்டை மனிதன்
படிக் கட்டுகிறு
இயற்கையோடு ஒ
வாழ்ந்தா? அல்ல; இ
கையை எதிர்த்
போர் புரிந்தே. இ
கையோடு புரி
ஓயாதவோரே, ம
முன்னேற்றத்
மார்க்கம்; ஆதே
ஒத்துவாழ்வதன்று
— சுவாமி
விவேகானந்

...தென்றும் சொல்லி
...க்கொத்தூரத்திலிட்டார்
...நாட் சென்றபின் இரு
...ம் இரணவீரர் தேடிய
...ருவி நிற்கவும் மந்திரி
...னி முதலிய ஸதாரு
...ல் வாய்பொத்திக் கட்
...கள் கேட்கவும் சிங்கா
...கொலுவிலெழுந்தருளி
...த சோழ இராசனும்
...வாரிப்பான் ஆசீர்வா
...செயிக்க வந்தபோது
...ன் நம்முடைய மறை
...எப்படியிருக்கிறார்
...ற விஜயப் பார்ப்
... மகாராசனே, நான்
...சொல்லுவேன். அந்தக்
...ர் செய்துவருகிற
...டுக் கேட்டால் மனம்
... சொல்ல நாக்குப்
...குதில்லையே என்றான்
... அரசன் திடுக்குற்
...ந்து கோலைப்பழப்
... இரு கண்களும் கழ
... விழந்து உக்கிர
...த்துடனே கேட்க,
...பான் ஐயா, அவர்
... செத்த மாட்டைத்
...ரூர்களென்றான். இது
...ம் உண்மையென்று
...னும் சாட்சிப்பிரமா
...ய்க் கண்டு பறைய
...ம் அவர்கள் சேரியை
... அக்கினிக்கிரையாகப்
...ரணம் பண்ணுவிக்க
... கொடுத்தார். அத்
...டளையைப் படைத்
...ப் முதலிய வீரசூர
...ர்களெல்லாரும் தனை
...கொண்டுதிரண்டுகூட்ப்
...ச்சேரியை நாலுபக்
... சூழ்ந்து வளைந்து
...வி வைக்க எதிர்
...து நின்றார்கள். அந்
...மயத்தில் அழுக்கு
...கிற வண்ணானொரு
... அழுக்குப்புடவையை
...ப் பறைச்சேரிக்குப்
...ருந்தவிடத்தில் பறை
...கலருக்கும் எசமானு
...ன்ற பறையனுடைய
... பூரண கெர்ப்பஸ்தி
...ருந்து வண்ணானைக்
... அவனுக்கு மனமிரங்
...
...வி அக்கினிக்குத்தன்னை
...ற்றும்படி அவனை
...டிக் கொண்டான்.
... வண்ணான் மனை
... அவளை எடுத்து
...முட்டையிற்போட்டு
... தூக்கியெடுத்துத்
...மேற் போட்டுக்
...டு கையிலே தடி
...று பிடித்துச் சேரியை
...ப் புறப்படுகையில்
...ச் சேரியை முற்றுகை
...டுக்கொண்டிருந்த
...வீரர்கள் இவனைக்கண்
...ப்போய் நீ யாரடா
...றுக்கி மறிக்க,
... நான் அழுக்கெடுத்து
...த்துப்பிழைக்கும் ஏழ்
...பன்று சொல்லிக்
...டுபோனான். ஏழ்னாலி
...தென் வெளியில்,
...பஸ்திரீ காலிரண்டும்
...பத்திலிருக்கிற பிள்ளை
...ண்டும், வண்ணான்
...ண்டும் ஆக ஆறு
...டே கையிலிருந்த
...க் கூட்டி நான் ஏழ்
...பன்றான். ஆகையால்
...ரங்கெட்டு ஏகாலி
...ழைக்கப்பட்டான்.
...தாரகை 28-5-1846
...1]

## ...ழ வாழலாமா?

...ற்கையோடு ஒத்து
...ழ் என்கிறார்களே;
... தேக்கத்துக்குவழி;
...க்கு வழி; ஒரு
... மனிதன் எப்
... கட்டுகிறான்?
...ற்கையோடு ஒத்து
...ந்தா? அல்ல; இயற்
... எதிர்த்துப்
... புரிந்தே. இயற்
...யோடு புரியும்
...தபோரே, மனித
...னேற்றத்துக்கு
...கம்; அதோடு
...வாழ்வதன்று.

— சுவாமி விவேகானந்தர்

இலக்கிய இளைஞர் — 4

# இராமன் பணிவு

நுணாவிலூர்க் கவிஞர்

**வி. கந்தவனம்**

எங்கும் ஒரே மகிழ்ச்சி! ஆனந்தவெள்ளம்! பூரிப்பு!

மகிழ்ச்சிப் பெருக்கினால் மக்கள் ஆர்த்தனர்; களித்தனர்! ஆடிப்பாடினர்; வர்த்தனர்; பருத்தனர்; சிலிர்த்தனர்.

முடிசூட்டுவிழா!

இராமபிரானுக்கு முடிசூட்டுவிழா!

இராமபிரானுக்கு முடிசூட்டுவிழாவா? இந்தச்செய்தியைச் சொன்னவர்களுக்குப் பொற்காசுகளையும் மணிமாலைகளையும் அன்பளிப்பாகக்கொடுத்தனர் மக்கள். அவர்களுக்கு அது மிகவும் இன்பந்தரும் செய்தி; பல நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த செய்தி.

மாமன்னன் தசரதனுக்கு வயது அதிகமாகியது. ஆட்சிப் பொறுப்பைத் தனது முத்தமகன் ராமனுக்கு அளித்துத் தான் ஓய்வுபெற எண்ணினான். இராமன் முடிசூடுவதற்கு ஏற்ற நாளைக் குறித்தான்; அதனை நாட்டு மக்களுக்கு அறிவிக்கும்படி பணித்தான்.

இராமன் நாளையே மணிமுடி புனைவான் என்ற செய்தி நாட்டுமக்களுக்கு தேவர்தம் அமுதம் போன்று இனித்தது. ஆடிப்பாடி அவர்கள் நகரை அணிசெய்தனர். நகரின் பெயர் அயோத்தி. அயோத்தி மாநகரம் தசரதனின் கோசல நாட்டின் தலைநகரம். அதனைத் தேவர் உலகு போன்று மக்கள் அலங்கரித்தனர். வீட்டு வாயில்களில் மக்கள் வாழைகளை நாட்டினர்; நிறைகுடங்களை வைத்தனர். வீதிகளெங்கும் கமுகமரங்களை நிறுவினர். முத்துமாலைகளால் அலங்கரித்தனர். பலவகைத் தோரணங்களை தொங்கவிட்டனர். அழகு செய்வோர் பூக்களைச்சொரிந்தனர். வாசந் தெளித்தனர், இனியமணப் பொருட்களை எங்கும் தூவினர்.

முடிசூட்டுவிழாவைக் காண மக்கள் வெள்ளம் போலத் திரண்டு எழுந்தனர். காளையரும் கன்னியரும், இளைஞரும் முதியவரும், வீரர்களும் வேதியரும், கலைஞர்களும் இரசிகர்களும், கற்றவரும் மற்றவரும், அரசர்களும், அமைச்சர்களும் வீதிகள் தோறும் நிரம்பிநின்றனர். இவர்கள் மட்டுமா? இராமனின் முடிசூட்டுவிழாவைக் கண்டு களிக்கத் தேவர்களே வந்துவிட்டார்கள்.

முடிசூடுவதற்கு நேரமாகிவிட்டது. இராமன் தேர்மீது புறப்பட்டுவிட்டான். அழகே உருவான இராமனைக் காணவேண்டுமென்னும் ஆசையால் வீதிகள்தோறும் மக்கள் திரண்டு சூழ்ந்துவிட்டனர். அவனைக்கண்டவர் 'இனி இந்த உலகம் உய்ந்தது' என்று மகிழ்ந்தனர். முதியவர்கள் 'நெடுங்காலம் நீ வாழ்வாயாக' என்று வாழ்த்தினர். இராமனைப் பெற்ற தசரதனைப் போற்றினர்.

இராமனை எல்லோரும் இவ்விதம் வாழ்த்துவதற்கும் போற்றுவதற்கும் அவனது குணநலமே பிரதான காரணமாகும். அவன் மிகுந்த அழகுடையவன்; நிறைந்த ஆற்றலுடையவன்; பெருவீரன். தந்தை சொல்லை மந்திரமாகக் கொள்பவன்; தாய்சொல்லைத் தட்டாதவன்; கற்றகல்விக்குத் தக ஒழுகுபவன். அரசகுமாரனாக இருந்தாலும் செருக்கு இல்லாதவன்; எல்லோரிடத்தும் அன்புடையவன்.

இத்தகைய நற்குணமுடையவனான் நாட்டுமக்கள் நெஞ்சில் இராமன் குடிகொண்டுவிட்டான். அவன்மீது மக்கள் பேரன்பு கொண்டிருந்தனர். அவ்வீரனைக் கண்டதும் அன்புப்பெருக்கால் என்புருகி நெஞ்சுருகி நின்றனர் மாந்தர்.

தசரதனுக்கு மனைவியர் மூவர். அவர்கள் கோசலை, கைகேயி, சுமித்திரை என்போர். இராமன் கோசலை வயிற்றிலே பிறந்தவன். கைகேயி வயிற்றிலே பரதனும், சுமித்திரை வயிற்றிலே இலக்குமணனும் சத்துருக்கனும் பிறந்தனர். இராமன் கோசலைக்கு மகனாயினும் கைகேயி மடியிலே வளர்ந்தவன்.

முடிசூடப்புறப்பட்ட இராமன் நேராகத் தனது தந்தையைக் கண்டு வணங்கி ஆசிபெறச்சென்றான். அரண்மனையிலே மன்னன் தசரதனை அவன் காணவில்லை. ஒருவேளை சிற்றன்னையாகிய கைகேயி மனையிலே தந்தை இருக்கக்கூடுமென எண்ணி அங்குச்சென்றான் இராமன்.

அங்கே தந்தையைக் காணவில்லை. கைகேயியைக் கண்டான் வளர்த்ததாயல்லவா? தாயைக்கண்ட கன்றைப்போன்ற அன்புபொங்க மனம் மகிழ்ந்து தலை நிலத்திலே பொருந்தும் வண்ணம் விழுந்து வணங்கினான். பின்னர் எழுந்து ஒரு கையால் தனது சிவந்த வாயினைப் பொத்திக்கொண்டு மற்றக் கையால் ஆடையைத் ஒதுக்கிக்கொண்டு பணிந்து நின்றான் முடிசூடப்போகும் இராமன்.

அவ்விதம் அடக்கத்தோடு நின்றவனை நோக்கி கைகேயி சொன்னாள்;

'மகனே, உனது தந்தை உனக்குக்கூறும்படி உரைத்த உரை ஒன்று உண்டு.'

இதனைக்கேட்ட இராமன் மிக உற்சாகம் அடைந்தான்.

'தாயே! தந்தை ஒன்றைக் கூற, அதனைச் சிந்தித்து தாங்கள் எனக்குப் பணிப்பதாயின் அது எனக்குச் சிறப்பையே தரும். அதனால் நான் உய்ந்தேன். இப்படி ஒரு பயனைப்பெற என்ன தவம் செய்தேனோ. தந்தையும் தாயும் தாங்களே. கட்டளையிடுங்கள். தவறாது அதனை மேற்கொள்வேன்' என்றான் உத்தம ராமன்.

"இந்த நாட்டைப் பரதன் ஆள, நீ காட்டுக்குச்சென்று பதினான்கு ஆண்டுகள் தங்கியிருத்தல்வேண்டும். இதுவே உன் தந்தையார் உன்னிடம் கூறச்சொன்ன கட்டளையாகும்" என்றாள் இரக்கமற்ற கைகேயி.

இராமனுக்கு முடிசூட்டு விழா என்று எங்கும் அறிவிக்கப்பட்டுவிட்டது. மக்கள் மகிழ்ந்து ஆரவாரித்து அயோத்தி மாநகரை அணிசெய்துவிட்டனர். விழாமண்டபத்திலே பிறநாட்டு மன்னவர்களும் முனிவர்களும் ஆன்றோர்களும் வந்து கூடிவிட்டனர். குறித்த நேரமும் வந்துவிட்டது. இராமனும் முடிசூடுவதற்கென்றுபுறப்பட்டுவிட்டான். இந்த முக்கியமான வேளையிலே இராமனைப் பார்த்து 'நீ நாடாளவேண்டாம். காட்டுக்குச்செல். நாட்டைப் பரதன் ஆளவேண்டும்' என்கின்றாள் கைகேயி.

இக் கட்டளையைக் கேட்ட கட்டிளங்காளையாகிய இராமனது உள்ளம் உவகையால் பூரித்தது. அவனது முகம் புதிய செந்தாமரை மலரினும் பன்மடங்கு மலர்ந்து பொலிந்தது. நாட்டை ஆளவேண்டிய பெரும்பொறுப்பு தன்னைவிட்டு நீங்குவது குறித்துமகிழ்ந்தான் அவன்.

"தாயே மன்னவன் கட்டளை என்று கூறாமல் இதனைத் தங்கள் கட்டளையே என்று கூறினாலும் அதனை நான் செய்யாமல் மறுப்பேனா, என்ன? எனது தம்பி பெற்ற பதவியும்செல்வமும் நான்பெற்றதைப் போன்றதன்றோ? தங்கள் கட்டளையைத் தலைமேற்கொண்டேன். காட்டுக்கு இன்றே புறப்படுகின்றேன்" என்று விடைபெற்றான் பெருங்குணம் பொருந்திய இராமன்.

தன்னை வளர்த்த தாய் சொல்லைத்தட்டாது மரவுரி உடுத்து, சடைமுடிதரித்து, தவக்கோலம் தாங்கி மனைவி சீதையுடனும் தம்பி இலக்குமணனுடனும் பெற்ற தாயாகிய கோசலையிடம் விடைபெற்றுக் கொண்டு காட்டுக்குச்சென்றான் இராமன்.

என்னே அவனது பணிவு!

# "இனிக்கும் நவரசம்"

'நவரசம்' இனிக்கிறது! தனித்துவமான அந்த மாதசஞ்சிகையைப் பார்த்தமாத்திரத்திலேயே உடனேயே படித்துவிடவேண்டுமென்ற ஆவலை ஏற்படுத்தி விடுகிறது!

எப்படி எப்படிவெல்லாம ஒரு சஞ்சிகை இருக்கவேண்டும் என்றுஎண்ணுகிறோமோ அவைவெல்லாம் அடங்கியுள்ளன.

சிறுகதையா? கவிதையா? கட்டுரையா? துணுக்குகளா?

இவைமட்டுமல்ல - கதைகளுக்கு ஏற்ற அழகான சித்திரங்கள் - அழகான எழுத்துக்கள் "படிபடி" என்று தூண்டுகின்றன.

'அட்டை'யைப் பார்த்ததும் பிரமிக்கிறோம்! ஈழத்தில் வெளியாகும் சஞ்சிகையா என்று மூக்கின்மீது கைவைக்கிறோம்.

பக்கங்களைப் படபடவென திருப்பிக்கொண்டு போகிறோம் — அங்கே முத்து முத்தான எழுத்துக்கள்! வண்ண வண்ணப் படங்கள்!

ஆனாலும் ஒரேஒரு கவலை எம்மை வாட்டுகிறது! இலக்கியதாகமும், அடிப்புமுள்ள காணவாய் இளைஞர் அபிவிருத்தி இயக்க நூல்நிலையத்தினர் இந்த 'நவரசம்' என்ற சஞ்சிகையை அச்சில் கொண்டுவரும் நாள் எப்போ என்பதுதான்!

இளைஞர்கள் செ. கிருஷ்ணதாஸ், க. தர்மலிங்கம், வி. கே. எம். ஆகிய மூவரும் இந்த இதழ் அழகே அமைக் காரணமானவர்கள். முத்துமுத்தான எழுத்துக்களுக்கும், அழகான சித்திரங்களுக்கும், இதழ் அமைப்புக்கும் இவர்களே காரணம்!

இந்தக்கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியர் "ஜெ ஜெயக்குமார்" ஓரளவு பத்திரிகை அனுபவமுள்ளவரென்பதனை ஆக்கங்களில் காண்கிறோம். துணை ஆசிரியர்கள் கரவை, மகேஸ்வரன், வி. கணேசன். ஆலோசகர்கள்: செ. சுவாமிநாதன், சி. நாகேந்திரன், எஸ். பரமானந்தன், இ. அ. செல்வநாதன்"

'நவரச'த்தில் "கரவை ராஜன்' எழுதியுள்ள பொன்னெழுத்து சிறுகதை. "அல்வைச் சுந்தர'னின் 'காதல் செய்து பார்க்க ஆசை' கவிதை, "நாவுக்கரசரே வாருமையா;" என்ற "கருணையோக'னின் கவிதை."செசந்தும் எப்போதும் தொடர்கதைதான்' என்ற சிறப்புச் சிறுகதை ஆகியன இடம் பெற்றுள்ளன. 'வில்வை — பாலா' எழுதியுள்ள 'காதலிக்க ஒருத்தியில்லை' என்பதனை நினைத்து நினைத்து சிரிக்கிறோம். செ. சுவாமிநாதன் எழுதியுள்ள பொருளாதாரக் கட்டுரையில் பயனுள்ள பல விஷயங்கள் அடங்கியுள்ளன.

'நவரசம்' முதல் இதழ் இது. விரைவில் நூற்றுக்கணக்கான இதழ்கள் படித்து மகிழக்கூடிய விதத்தில் வெளிவர வாழ்த்துகிறோம்"

— ராமா

அருணோதயம்

சிறு காவியம்

## அழகனும் அழகியும்

அம்பரம் என்னும் அந்த
அழகுறு மூரின் கண்ணே
அம்பல வூர்க்கு ஆதி
யீன்றிடு புதல்வன் ஆகும்
அம்புலி போற்ற வந்த
அறிவுறு அழக னூர்க்கும்
அப்புறு கண்ணன் அந்த
அருந்ததி யீன்றெ டுத்த

வான்புகழ் வீரஞ் சேரும்
வனப்புறு சோமான் பெற்ற
தேன்தரு மொழியான் அந்தச்
சேயிழை அழகி யார்க்கும்
வான்புகு வழியில் நிற்கும்
வயதுடைப் பெரியோர் கூடி
வான் மொழி கொண்டு வாழ்த்தி
வான் மணஞ் செய்து வைத்தார்.

இருவரும் ஒருவ ராகி
இன்புடன் இருந்த காலை
அருகவர் முருகன் தன்னை
அப்புரம் காண வேண்டி
வருவினை யாவும் போக்கும்
வள்ளலை நெஞ்சில் வைத்தே
பெருதொலை வெய்தி வந்து
பெருமர் முகப்பில் நின்றார்.

அழ கெலாம் ஒருங்கு சேர்ந்த
அழகனார் கோயில் முன்றில்
இழி நிலை இருக்கக் கண்டே
இளவலும் துணையும் கெத்தப்
பழுவுறு மனத்தி னோடு
பாங்குறு கோவிற் கூட
அழகுறு கதவைப் பார்த்தார்
ஆங்கது அடைத்து நிற்க.

அடைத்திடு கதவு கண்டே
ஐயனே முருகா வென்றே
படைத்திரன் அங்கும் இங்கும்
பரவிடு பான்மை கண்டே
படைத்திரள் கொண்ட அந்தப்
பன் மலும் சூரன் தன்னை
வதைத்திடு வேலா வெங்கே
வதிந்தனை என்றே நொந்தார்.

நொந்தவர் மேலும் அந்த
நுண்பொருள் தன்னை வேண்டி
எந்தையே இறைவா எங்கள்
ஏந்தலே என்றே நின்று
வந்தனை செய்து மெத்த
வருந்தியே விழுந் தெழுந்தே
சுந்த மில் தெய்வந் தன்னை
யகமதல் வைத்தே நின்றார்.

நின்றிட்டார் நெடிதே அங்கே
நெஞ்சினில் அமைதி யின்றி
தொன்றுறு புகழ் தான் மேவும்
தூபிகள் தாழும் அங்கே
நன்றுறு நிலையில் நின்றே
நாணுறு வாறு போல
நின்றன நிறைவி மூந்தே
நினைத்திட முடியா வாறே.

வாறிது வான தாலே
வரும் வினை களையும் கந்தன்
ஆறிரு தோள்கள் கொண்டோன்
ஆங்கிலன் என்று கொண்டே
மாறிடு மனத்தோ டேகி
மடமது வொன்றில் புக்கே
ஆறுத லில்லா நெஞ்சோ
டமர்ந்தனர் இரவு போக்க.

[தொடரும்]

மொ. கணபதிப்பிள்ளை.

## மாணவர்களுக்கு 'டியூஷன்' அவசியமா?

# 'டியூஷன்' ஒரு 'பாஷன்'

— செல்வன் குமார்: சிவகுமாரன் —

'டியூஷன்' என்னும் பிரத்தியேக போதனை சமூகத்தில் புரையோடிவிட்ட ஒரு பெரும் பிரச்னையாகும் சாதாரணமாக பாடசாலை வகுப்பொன்றில் 40 மாணவர்கள் இருப்பின், ஏறத்தாழ 35 மாணவர்கள் எல்லாப் பாடங்களுக்கும் அன்றேல் ஒரு பாடத்திற்காயினும் பிரத்தியேக போதனை வகுப்புகளுக்கு செல்பவர்களாகவே விளங்குகின்றனர். 'பிரத்தியேக போதனை' என்னும் நோய் சமீபகாலமாக மிகவும் மோசமான நிலையில் பாலர் வகுப்பு முதல், பல்கலைக்கழக புகுமுக வகுப்பு வரையுள்ள மாணவர்களை ஆட்டிவைக்கிறது. முன்னர் உயர்தர மாணவர்களே பொதுவாக "பிறைவேட் டியூஷன்" வகுப்புகளுக்குச் சென்று வந்தார்கள். ஆனால் இப்போது எல்லா மாணவர்களும் பிரத்தியேக போதனை வகுப்புக்களில் பங்குபற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு இந் நோய் வழுங்குப்பிடியாக பரவியிருத்தற்குக் காரணம் என்ன? பெற்றோர்களும், கல்வியுடன் தொடர்புடைய மற்றோரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியகேள்விதான் இது.

### போட்டிப் பரீட்சை

பெரும்பாலான உயர்தர மாணவர்கள் போட்டிப் பரீட்சையில் பங்குபற்றுகிறார்கள். இதில் கூடிய புள்ளி பெற்றவர்கள்மட்டும் பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பைப்பெறுகிறார்கள். இதனாலும் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே டியூசன் எடுக்காவிட்டால் பரீட்சையில்சித்தியடையமுடியாது என்ற ஒரு வினை பயம் ஏற்படுகிறதனாலும் 'டியூசன்' மாணவரிடையே மிக இன்றியமையாததாகிவிடுகிறது.

இன்னும் சிலர் ஆசிரியர்கள் தம்மை வகுப்புகளில் கவனிக்கிறார்களில்லை. குறிப்புக்களை மட்டுமே பக்கம்பக்கமாக சொல்லித் தருகிறார்கள். ஆகவேதான் விளக்கம் பெறுவதற்கு டியூசன் வகுப்புக்களை நாடுவதே சிறந்ததெனக் கருதுகின்றனர். ஆசிரியர்கள் படிப்பிக்கும் விஷயங்களில் சில விளங்குவதற்கு சிரமமாக இருக்கலாம். அவற்றை ஓய்வான நேரத்தில் பாடசாலை ஆசிரியரை நாடியோ அன்றேல் மற்றும் சக மாணவர்களை அணுகியோ விளங்கிக்கொண்டால் அதுவே சாலச்சிறந்ததாகும். பாடசாலையில் நன்கு படிப்பிக்காமல் பிரத்தியேக போதனைகளில் திறம்படக் கற்பிக்கும் ஆசிரியர்களும் இல்லாமலில்லை. ஆனால் குறை எங்கோ இருக்க குற்றத்தை வேறெங்கோ சுமத்துவது முறையல்ல.

### 'டியூஷன்ஒரு பாஷன்'

இன்று "பிறைவேட் டியூசன்" ஒரு பகட்டாக 'பாசனாக'வே மாறியுள்ளது. தமது பிள்ளைகளை பிரத்தியேக போதனை வகுப்புகளுக்கு அனுப்புவதை மதிப்பாக பல பெற்றோர்கள் கருதுகின்றனர். தமது பிள்ளைகள் இத்தகைய வகுப்புகளுக்குச் செல்வதால் பிற்காலத்தில் பிரபல டாக்டராகவோ, இஞ்ஜினியராகவோ வந்துவிடுவார்களென பகற்கனவு காண்கின்றனர். இதனால் தமது பணத்தை வீண் விரயமாக்குகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் சாதாரணமாக உயர்தர வகுப்பு மாணவரொருவரிடம் இருந்து பாடமொன்றிற்கு மாதாந்தம் முப்பது ரூபாவுக்குமேல் பிரத்தியேக போதனை வகுப்புக்களை நடாத்துவோர் பெறுகின்றனர். தலைநகரில் இதிலும் இரண்டுமடங்கு கூட வசூலிக்கின்றார்களாம்.

அடுத்த வாரம்

செல்வி. சாரதாதேவி சோமசுந்தரத்தின்

கட்டுரை

பிரசுரமாகும்.

### மாணவரின் திறமையை திட்டவட்டமாக அறிய

பிறைவேட் டியூசன் வகுப்புக்களை ஒழிப்பதால் பலவிதமான நன்மைகளும் ஏற்படும். ஆசிரியர்கள் தமது முழுத்திறமையையும் தமது பாடசாலை மாணவர்களிலேயே செலுத்தி, மாணவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த இது வழிவகுக்கும் மேலும்மாணவர்களின் உண்மையான திறமையை திட்டவட்டமாக அறியமுடியும். இதனால் பின்தங்கிய இடங்களில் வாழும் மாணவர்கள், ஏழை மாணவர்கள், பணக்கார மாணவர்கள் ஆகிய அனைவரும் ஒரே நிலையில் தத்தமக்குள்ள சொந்தத்திறமையை வெளிப்படுத்த இடம்வகுக்கும்.

நாட்டின் நோய் நீங்கினால் வைத்தியர்கட்கு வேலையில்லாத்திண்டாட்டம் ஏற்பட்டாலும், அது மக்களுக்கு நல்லதே. அதுபோலவே 'பிறைவேட்டியூஷன்' எனும் 'கல்வியின் கள்ளச் சந்தையை' ஒழிப்பதால் பெற்றோர்களும் மாணவர்களும் நல் வாழ்வு வாழ்வார்களென்றால் மிகையாகாது.

# 'டியூஷன்' பிரச்னைக்கு எனது மறுப்பு

அன்புள்ள விமலா அக்கா,

சென்ற ஈழநாடு வாரமலரில் செல்வி ராஜியின் 'டியூஷன்' பற்றிய கருத்துக்களைக் கண்டு நான் வியப்படைந்தேன். வேதனையடைந்தேன் என்றால் மிகையாகாது. அவரது குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றிற்கும் பதிலிறுக்க வேண்டியது எனது கடமையாகும்.

அவரது முதலாவது குற்றச்சாட்டு 'மாணவர்கள் வகுப்பில் ஆசிரியர் படிப்பிக்கையில் அசிரத்தையாக இருக்கிறார்கள்' என்பதாகும்.

ஒரு பாடம் விறுவிறுப்பானதாக இருந்தால் மாணவர்கள் அதை ஆவலுடன் கவனிப்பர். ஆனால் பாடம் போரடித்தால் ஒன்று யாரைக்குப் பார்த்துக் கொண்டிருப்பார்கள் அல்லது நித்திரை கொள்வார்கள். எனவே ஆசிரியர் படிப்பிப்பது சுவையாகவும் விளங்கக்கூடியதாகவும் இருப்பின் மாணவர்கள் கவனிப்பார்களே தவிர அசிரத்தையாக இருக்கமாட்டார்கள். எனவே, தவறு மாணவருடையதல்ல

செல்வி ராஜி இரண்டாவதாகக் கூறுகிறார்: 'சந்தேகம் ஏற்படின் உடனடியாக எழுந்து ஆசிரியரிடம் கேட்க வேண்டும்' அப்படிக் கேள்வி கேட்பதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்படுத்தப் படவேண்டும் என்பதைத்தான் நானும் விரும்புகிறேன் ஆனால் சிலசமயம் சந்தேகம் கேட்க எழும்புவதால் மாணவர்கள் அவமானப்படவல்லவோ நேருகிறது. ஆசிரியர் எல்லா மாணவரையும் சமமாக மதித்து உற்சாகமூட்டின் எந்தமாணவனும் தனக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கேட்கத்தவறமாட்டான்.

அடுத்த குற்றச்சாட்டு 'ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப் பாடங்களை ஒழுங்காகச் செய்வதில்லை இதனால் ஆசிரியர் தண்டிக்க மாணவருக்குக் கல்வியிலேயே ஒருவித வெறுப்பு ஏற்படுகிறது' என்பதாகும்.

ஆசிரியர்கள் வீட்டுப் பாடங்கள் அதிகமாகக் கொடுக்கக் கூடாது. ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் கொடுக்கும்போது அவரைப் போலவே ஏனைய ஆசிரியர்களும் வீட்டுப்பாடங்கள் கொடுக்கிறார்கள் என்பதை மறந்துவிடுகிறார். ஒரு மாணவன் வீட்டைவிட்டு காலை 8 மணிக்குப் பாடசாலைக்குச் சென்றால் மாலை 4 மணிக்கே வீடு வந்துசேருகிறான். எனவே எல்லா ஆசிரியர்களும் தரும் வீட்டுப்பாடங்களைச் செய்ய அவனுக்கு நேரம் எப்படிப் போதுமானதாகும்? அத்துடன் வீட்டில் பெற்றோர் இடும் வேலைகளையும் அவன் செய்ய வேண்டுமல்லவா? எனவே ஆசிரியர்கள் வீட்டுப் பாடங்கள் கொடுப்பதைக் குறைக்க வேண்டும். ஆனால் மாணவர்கள் தாங்களாகவே பயிற்சிகளைச் செய்து விளங்காதவற்றைத் தன்னிடம் கேட்க ஆசிரியர் வகை செய்யவேண்டும்.

"வகுப்பில் ஆசிரியர் ஒரு முறையில் கணக்கை விளக்கப்படுத்துவார். டியூஷன் ஆசிரியர் இன்னொருவிதமாக விளங்கப்படுத்துவார். எனவே மாணவரின் மூளை குழம்பிவிடும்' இது செல்வி ராஜி கூறும் இன்னொரு வகைக்குற்றச்சாட்டு. கேத்திர கணிதத்தில் சில தேற்றங்களை நிறுவுவதற்கு இருவிதமான முறைகள் உண்டு. மேலும் உராய்வு சம்பந்தப்பட்ட கணக்குகளில் அவற்றைச் செய்வதில் பலமுறைகள் உண்டு. இவை புத்தகங்களிலுமுள்ளன. வகுப்பிலும் ஆசிரியர் இருவிதமாகவும் தேற்றங்களை நிறுவிக்காட்டுகிறார். அப்படிப் பார்க்கப்போனால் இதுவரைபல மாணவர்களின் மூளை குழம்பியிருக்கவேண்டுமே.

செல்வி ராஜியின் கடைசிக் குற்றச்சாட்டு 'மாணவர்கள் டியூஷனுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் படத்துக்குப் போகிறார்கள் எனவே அவர்கள் கெடுவதற்கு டியூஷன் ஏதுவாகிறது' என்பதாகும். மாணவர்கள் பாடசாலைக்குப் போவதாகக் கூறிவிட்டுப் படத்துக்குச் செல்கிறார்கள். ஆனால் எந்தவொரு மாணவனும் டியூஷன் வகுப்பைத் தவிர்த்துப் படத்துக்குப் போகமாட்டான். ஏனெனில் அவன் அங்கு பணம் கொடுத்துப்படிக்கிறான். அப்பணத்தை ஒரு போதும் வீணாக்கமாட்டான்.

அன்பான தம்பி,
கோ. யோகேஸ்வரன்.

மாணவர் மலர்

### மாவீரன் நெப்போலியன் போனபார்ட்

# ஐரோப்பாவை இருபது ஆண்டு காலம் அடிபணிய வைத்தான்

**சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கொள்கையைக் கடைப் பிடித்து வெற்றி வீரனாகத் திகழ்ந்தான்**

உலகில் தோன்றி மறைந்து அழியாப் புகழ் எய்திய வீரர்களுள் நெப்போலியனும் ஒருவன். மாவீரன் நெப்போலியன் பதினெட்டாம் நூற்றாண்டில் பிறந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் மறைந்த மாபெரும் இராணுவத் தளபதியாவான். அவன் பிரெஞ்சுக் குடிமகனாகப் பிறந்தான். ஆனால் ஐரோப்பாவையே இருபது ஆண்டு காலம் கலங்கச் செய்து அடிபணியவைத்தான்.

### போர்முறையில் பல புதுமைகளைக் கையாண்டான்

அவன் போர் முறையில் பல புதுமைகளைக் கையாண்டான். அவன் செய்த இராணுவ சாகசங்கள் உலகசரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டன நெப்போலியனது எழுச்சி மிகவும் விறுவிறுப்பானது. அவனது வீரத்தை உலகம் போற்றியது. அவன் பெயரைக் கேட்டாலே உலகம் நடுங்கியது அவன் வாழ்க்கையில் பெரும்பகுதி நாட்கள் போர்க்களத்திலேயே கழிந்தது.

### பெருமை குலையக் காரணம்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற புரட்சிக் கொள்கையைக் கூறிக்கொண்டு விடுதலை வீரனாகச் சென்று கொண்டு வெற்றிவாகை சூடிய நெப்போலியன் புரட்சிக் கருத்துக்களைக் கைவிட்டு சர்வாதிகாரியாக மாறி, தான் நினைத்தபடி சட்டங்களை வகுக்க முயன்றதும் தேசிய உணர்ச்சியும் சுதந்திர உணர்ச்சியும் ஒன்றுசேர மக்கள் நெப்போலியனை வெறுத்தனர். ஆகவே நெப்போலியனது வெற்றிக்குக் காரணமாயிருந்த தேசிய உணர்ச்சியும் சுதந்திர உணர்ச்சியுமே அவனது தோல்விக்குக் காரணமாகவும் இருந்து இறுதியில் அவனது பெருமை குலையத் தொடங்கியது.

### பிறப்பு

1769-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி கார்சிக்கா தீவில் ஆயாக்சோ என்ற இடத்தில் சார்ள்ஸ் போனப்பார்ட் என்ற பெயர் கொண்ட இளம் வழக்கறிஞர் ஒருவருக்குப் புதல்வனாகத் தோன்றினான் மாவீரன் நெப்போலியனுக்கு லதீசா ரமோலினி என்ற பெயர் கொண்ட தாய் குழந்தைப் பருவத்திலேயே அவனுக்கு வீரப்பால் ஊட்டினார். "தோல்வியைக் கண்டு துவளாமல் மேலும் மேலும் வெற்றிப் பாதையை நோக்கி முன்னேற முயல வேண்டும்" என்று மகனுக்கு அறிவுரை கூறினாள்.

— கி. குமாரவேல் —
கன்னாகம்

### பிள்ளைப் பருவத்தில்....

நெப்போலியன் ஐந்தாம் வயதை அடைந்தபொழுது பள்ளிக்கு அனுப்பப்பட்டான். அவன் சிறு பிள்ளை முதலே ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று வந்தான். பாடங்களைத் தவறாமல் படித்தான், வீரச் செயல்களில் துணிவாக ஈடுபட்டான். யாராவது அவனைக் கேலி செய்தால் உடனே அளவிறந்த கோபம் வந்துவிடும். கையில் கிடைத்த பொருளை அவர்கள்மீது வீசுவான். அதனால் அவன் பலமுறை தொல்லைகளுக்கு ஆளாக நேர்ந்தது. அவன் யார் அவனுக்குச் சாதுபோல

(11-ம் பக்கம் பார்க்க)

# விடை தெரியாதா? அஞ்ச வேண்டாம்!

வகுப்பில் ஆசிரியர் கேட்கும் கேள்விக்குப் பதில் தெரியவில்லையா? அல்லது அவர் விளங்கப்படுத்தும் பாடமே புரியவில்லையா? அதை அவருக்குத் தெரியப்படுத்துவது சங்கடமான விஷயம்தான். எழுந்து 'எனக்கு விளங்கவில்லை' என்று கூறும்போது வகுப்பில் உள்ள அனைவரது கவனமும் உங்கள்மீதே திரும்பும். மற்றவர்கள் எல்லோரும் புரிந்துகொண்ட விஷயம் உங்களுக்குமட்டும் புரியவில்லை என்று எழுந்து நின்று சொல்ல வெட்கப்பட்டு கேட்காமலே நீங்கள் விட்டுவிடக்கூடும். இதனால் பாதிப்பு ஏற்படுவது உங்களுக்குத்தான்.

இப்பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்க முன்வந்திருக்கிறார் பிரிட்டிஷ் ரோயல் விமானப்படை அதிகாரி ஒருவர்.

முக்கோண வடிவமான ஒரு பிளாஸ்டிக் சாதனத்தை இவர் அமைத்துள்ளார். இம்முக்கோணத்தின் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு நிறமாக இருக்கும் இந்த ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு பதிலைக் குறிக்கும். உதாரணமாக, மஞ்சள் நிறம், 'எனக்குப் புரியவில்லை' என்ற பதிலைக் குறிக்கக்கூடும். இம்முக்கோண அமைப்பு மாணவரின் மேஜைகளில் வைக்கப்பட்டிருக்கும். விளக்கப்படும் பாடம், 'தனக்கும் புரியவில்லை' என்று மாணவர் எண்ணினால், தன் மேஜையில் இருக்கும் முக்கோணத்தின் மஞ்சள் நிறப்பக்கத்தை ஆசிரியர் இருக்கும் பக்கமாகத் திருப்பினால்போதும். மற்றவர்கள் அறியாமலே ஆசிரியருக்கு உங்கள் நிலைமை புரிந்துவிடும்.

# இந்திரா பிரதமரானர்



**1964** ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி ஜனநாயக முறைப்படி அன்னடக்கமும், எளிமையுமே உருவான திரு. லால்பகதூர் சாஸ்திரி நேருஜிக்குப் பின்னர் பாரதத்தின் பிரதமரானர். திரு. சாஸ்திரியின் மந்திரி சபையில் இந்திரா தகவல் ஒலிபரப்பு இலாகா அமைச்சராகப் பதவியேற்ருர்

### தகவல் ஒலிபரப்பு அமைச்சர்

தனக்குக் கிடைத்த பதவியைச் செவ்வனே வகிக்க நிர்வாகத்தில் தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்டார். கல்வியும் பொது அறிவும் டெலிவிஷன் மூலம் வளரத் திட்டங்கள் வகுத்தார். சினிமாக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார் தன் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் எந்த வேலையையும் தந்தையைப்போன்று கவனமாகவும் துரிதமாகவும் செய்து முடித்துவிடும் திறமை மிக்கவர் இந்திரா. இவரது நிர்வாகத்தில் ஊழலோ, பாரபட்சமோ, சலுகைகளோ கிடையாது.

### ரஷ்ய விஜயம்

ரஷ்யாவில் கோஸிஜின் பதவிக்கு வந்த பின்னர் முதன்முதல் இந்தியாவிலிருந்து அங்கு சென்ற அமைச்சர் இந்திராதான். சோவியத் தலைவர்களுடன் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடாத்தி அந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையையும் அது சீன, இந்தியா ஆகியவற்றின்மேல் கொண்டுள்ள அபிப்பிராயத்தையும் அறிந்துகொண்டார் இந்திரா. ருஷ்யா இதுகால வரை செய்துவந்த உதவி பாரதத்துக்குத் தொடர்ந்து கிடைக்கும் என்பதையும் உறுதிப்படுத்திஞர்.

மேலும் ஐரோப்பாவின் பல நாடுகளுக்கும் விஜயம் செய்தபின்னர் நியூயோர்க்கில் நேரு கண்காட்சியைத் திறந்துவைக்க அமெரிக்காவுக்கும் சென்று திரும்பிஞர் இந்திரா.

### போர்முனைக்குச் சென்றார்

நாட்டில் மீண்டும்பிரச்சினை தலைதூக்கியது. பாகிஸ்தான் படைவீரர்கள் காஷ்மீருக்குள் ஊடுருவல் செய்தனர். இதனுல் போர் மூண்டது. இச்சமயத்தில் இந்திரா காலந்தாழ்த்தாது செயல்படவேண்டும் என உணர்ந்து சிறீநகருக்கு விரைந்தார். படை வீரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திஞர். கூட்டங்களில் உரையாற்றி அமைதிக்கு மக்களிடம் இருந்த ஆதரவைத் திரட்டிஞர். போர்முனைக்குக் கூடச் சென்று ஜவான்களுடன் உரையாடிஞர். அவரின் முயற்சிகள் வீண்போகவில்லை இறுதியில் போர்நிறுத்தம் ஏற்பட்டது.

### சாஸ்திரி மறைவு

இச்சம்பவத்துக்குப் பின்னர் பிரதமர் லால்பகதூர் தாஷ்கண்டுக்குப் புறப்பட்டுச் சென்ருர். ஆவரைறனர் இன்னும்சிலர் இந்திரா மகிழ்ச்சியுடன் மத்திய அமைச்சர்களோடு சேர்ந்து வழியனுப்பிவைத்தார் இந்திரா தாஷ்கண்டில் ஒப்பந்தம் செய்துகொண்ட பிரதமர் திடீர்மரணமானர். தகவல் அமைச்சரான இந்திராவுக்கேஇத்துக்கரமான செய்தி முதலில்கிடைத்தது சிறுவயதிலிருந்தே தங்கள் குடும்பத்துடன் ஒட்டி உறவாடிய தந்தைக்குப்பின் தனக்குத் தந்தைபோல் இருந்த ஒருவரைக் காலன் பறித்துவிட்டானேஎன நினைந்து இந்திராகவலைக்கடலில் மூழ்கிஞர். பதவியேற்ற 19 மாதங்களுக்குள் மறைந்த இந்த நல்லவரை நினைத்து நாடேகலங்கிற்று நமது அடுத்த பிரதமர்யார் என்ற கேள்வி ஒவ்வொருவரது மனதிலும் எழுந்தது.

அடுத்த பிரதமர் யார் என்பது குறித்துப் பலரும் பலவாருகப் பேசிக்கொண்டனர். இடைக்காலப் பிரதமரான நந்தாவே பிரதமர் ஆவர் என்றனர் சிலர் ஒருசாரார் ரயில்வே மந்திரி திரு. எஸ். கே. பாட்டீல் பிரதமராவர் என அபிப்பிராயம் தெரிவித்தனர். பாதுகாப்பு அமைச்சர் சவான் பிரதமராகலாம் என்றனர் மற்ருெருசாரார் காங்கிரஸ் தலைவர்காமராஜருக்கே பிரதமர் பதவி என்றனர் இன்னும்சிலர் இந்திரா பிரதமர் ஆவார் என ஒருவரும் கனவுகாணவில்லை.

### பிரதமர் தெரிவு

ஆனல் நுண்ணிய அறிவாற்றலும் அரசியல் ஞானமும் ஒருங்கேவாய்ப்பெற்ற காமராஜர் பின்னணியில் இருந்துகொண்டு பிரதமரை தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டார். அவரே இந்திராவைத் தெரிவு செய்ய வேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தார். இவரது

## அரசியல் வாழ்வில் புடமிட்ட தங்கம்

— கே. ஜி. —

இந்த அபிப்பிராயத்தை காங்கிரஸ் அங்கத்தவர்களும் எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் ஏற்றுக்கொண்டனர். என்னும் மொரார்ஜியின் எதிர்ப்பை காமராஜர் சமாளிக்கவேண்டியேற்பட்டது. மொரார்ஜி இந்திராவை எதிர்த்து நின்ருர். 1966-ம் ஆண்டு 19-ம் திகதி மத்திய மண்டபத்தில் பிரதமர் தெரிவு நிகழ்ந்தது. மொரார்ஜியின் விருப்பப்படி ரகசிய வாக்கெடுப்புமூலமே தேர்தல் நடைபெற்றது. அன்றைய தினம் இந்திரா மகாத்மாவின் சமாதிக்குச் சென்று வணங்கிவிட்டுத் திரும்பிஞர். இத்தேர்தலில் 128 வாக்குகள் வித்தியாசத்தில் இந்திரா வெற்றிபெற்று இந்தியாவின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைத் தட்டிக்கொண்டார். பாராளுமன்றத்துக்கு வெளியே நின்ற பெருந்திரளான மக்கள் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தனர். மீண்டும் நேருஜியே தங்களைக் காக்க வந்துவிட்டது போன்று பெருமகிழ்ச்சிகொண்டு நேருஜிக்கு ஜே! நேருஜிக்கு ஜே! எனக் கூறி இந்திராவுக்குத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

பிள்ளைப் பிராயத்திலிருந்தே தன் குடும்பத்தோடு நாட்டின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்து அப்பணியில் புடம்போட்ட பொன்னை இந்திரா பாரதத்தின் பிரதமர் ஆஞர்.

(முற்றும்)

## இந்திரா வாழ்வில் — 14

## குடும்பச் சுடர்

தயாரிப்பு — குணம்

# கணவர்கள் பலவிதமானலும் . . . .



'எனக்கு இரண்டு வயது வந்து விட்டதே! நான் இப்பொழுது பெரியவன் அல்லவா? என்று கூறுகிருர் போலும்இங்கு கம்பீரமாக அமர்ந்திருக்கும் பொன்னுத்துரை இராஜேஸ்வரன் கொடிகாமத்தைச் சேர்ந்த இவர் சமீபத்தில் தனது 2-வது பிறந்ததினத்தை கொண்டாடிஞர்.

"அறன் எனப்பட்டதே
இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின்
நன்று"

என்றுவாழ்க்கைக்கு இலக்கணம் கூறுகின்றது திருக்குறள். இந்த அறம் என்பது இல்வாழ்க்கையை நடாத்திச் செல்லும் ஆண் பெண் என்ற இருவர்க்கும் உரியதே. இல்லறம் என்ற வாழ்க்கையை நடாத்த ஆணின்றி பெண்ணல் முடியாது. அதுபோல பெண்ணின்றி ஆணுலும் முடியாததாகும்.

உலகிலே மனிதனுகப் பிறப்பது அரிது. அதுவும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது. அப்படியும் இருந்து பெண்ணுகவும் பிறந்துவிட்டால் அதன் பெருமை சொல்லுக்கும் அப்பாற்பட்டது; இல்லாமலா,

மங்கையராய்ப்
பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட
வேண்டுமம்மா
பங்கையக் கைநலம்
பார்த்தல்லவோ – இந்த
பாரில் அறங்கள்
வளருதம்மா

என்று கவிஞர் பாடியுள்ளார்.

### ஆக்கவும் அழிக்கவும் ...

பெண்ணுகப் பிறந்துவிட்டால்மட்டும் போதாது. பெண்மைக்குரிய தன்மைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளும்போதுதான் பெண் பெருமையடைகின்ருள் 'கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாகுமா'? அதுபோல் பெண்கள் எல்லோரும் பெருமைக்குரியவர்களும் இல்லை என்பதும் உண்மைதான். ஆனலும் பெண்களால் ரோமாபுரி ராஜ்யங்கள் ஆளப்பட்டும் இருந்தன. அதுபோல் பெண்களால் உலகம் அழிந்ததும் உண்டு. எனவேதான், 'உலகை ஆக்கவும் வல்லுனர் பெண்டிரே. அதுபோல் அழிக்கவும் வல்லுனர்பெண்டிரே என்று கூறினர் போலும். பண்டைக்காலத்தில் வாழ்ந்து நம் பெண் மரபுக்கு பெருமை கூறிச்சென்ற பத்தினிகளைப்போல் பத்தினிகள் இன்றும் இலைமறை காய்போல் இருக்கவே செய்கின்றனர்.

பெண் எனும் தன்மை மனித உருவுடன் நின்றுவிடவில்லை. நம்மொழியை, நம்நாட்டை, ஏன் மண்ணை, கடலைக்கூட பெண்ணின் தன்மை பொருந்தவே அழைக்கிருர்கள். பொறுமையின் நிறைவு பெண். எனவேதான் அவ்வாறைத் தாங்கும் நிலத்துக்கு பெண்ணை ஒப்பிட்டனர் ஆன்றோர்.

### சமுதாயப் பண்ணையின் விதைநெல்

பெண்கள் சமுதாயப் பண்ணைக்கு விதைநெல்லைப் போன்றவர்கள். வருகின்ற தலைமுறைகளை நன்ருகப் பயிர்செய்யவேண்டியவர்கள். விதைநெல்லே கெட்டுச் சீரழிந்தால் விளைவு என்னவாகும்? ஒரு பெண் புகழ் சம்பாதிக்கலாம். அளவற்ற அறிவைச் சம்பாதிக்கலாம். செல்வமும் செல்வாக்கும் சம்பாதிக்கலாம். ஆனல் சாதாரண உலகில் சாதாரண முறையில் சாதாரண மனிதர்கள் வாழும் வாழ்க்கையைச் சம்பாதித்துக்கொள்ளாதவரை சாமானிய உலகில் அவளைப் பெண்ணுக ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

பெண்மை என்பது கண்ணிற் புலனுவதோர் அமைதித்தன்மை. பெண்மை படைப்புக்களில் எல்லாம் அழகானது! மேலானது இறுதியானது. அழகுபெண்களுக்குப்பெருமையைத்தருகின்றது. கற்பு அவர்களுக்கு அளவற்ற மதிப்பைக் கொடுக்கின்றது. அடக்கம் அவர்களைத் தெய்வங்களாகக் காட்டுகின்றது.

இவ்வண்ணம் பெண்ணின் பெருமையை எத்தனையோ அறிஞர்கள் கூறியுள்ளனர்.

— "சண்முகசர்வா" —

ஆனல் ஏனே சில பெண்கள் தமது உயரிய தன்மைகளைத் தேடிக்கொள்ள மறந்து பெருமைக்குப் பதில் சிறுமையையோ தேடிக்கொள்கின்றனர். அன்பினல் ஜெயிக்கமுடியாததை அன்பினல் ஜெயிக்கலாம். ஆயுதம் கொண்டு போராடிப் பெற வேண்டிய வெற்றியைப் பெண் தன் அன்புகனிந்த வார்த்தையால் பெற்றுக்கொள்கிருள். இந்தப் பெண்ணின்ஞலா வாழ்க்கையை நடாத்த முடியவில்லை.

### விவாகம் ஒரு சூதாட்டம்

"விவாகம் ஒரு சூதாட்டம். இதில் ஆண் தன் சுதந்திரத்தைப் பறிகொடுக்கின்ருன். பெண் தன் சுதந்தரப்பணயம்வைக்கிருள்". இப்படி ஓர் அறிஞர் கூறியுள்ளார். முன்பின் பழகாத ஒருவருடன் தன் வாழ்க்கையை இணைத்துக்கொள்ளும் பெண்ணுக்கு அந்தப் புதிய உறவால் ஏற்படும் இல்லறவாழ்வில் எதுவும்வரலாம். என்னவும் இருக்கலாம். எது வந்தாலும் தாய்க்கும் பொறுமையும் அதைப் பொறுத்துக் கொள்வதோடு மட்டும்நில்லாது இன்பமாக இல்லறத்தை நடாத்த தன் சுகமனைத்தையும் தியாகம் செய்கின்ருள்.

பெண்ணின் பெருந்தக்க
யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப்
பெறின்

தங்கத்தைவிட மேலானது என்ன? சூரியகாந்தம். சூரியகாந்தத்தைவிட மேலானது என்ன? அறிவு. அறிவைவிட மேலானது என்ன? பெண். கற்புடைய பெண்ணைவிட மேலானதுஎன்ன? ஒன்றுமே இல்லை "ஆழ்ந்த ஒழுக்க உணர்ச்சி இன்றேல் உயரிய வாழ்வு இல்லை" என்கிருர் எமர்சன். பெண் ஒழுக்கத்தைக் காக்கக்காக்க பெருமை உயர்ந்துயர்ந்து கொண்டே போவாள்.

### பெண்குலம் தெய்வத்தின் வாசஸ்தலம்

இல்லறம் அன்பால் சூழப்படவேண்டும். அன்புசூழ்ந்த இல்லறத்தில் நல்லறமதவிர வேறு இல்லை. நாம் பேசும் ஒவ்வொரு சொல்லிலும் அன்பு பெருகட்டும். அவ்வாறே செயலிலும் அன்பு மிளிரட்டும். வாக்கிலிருந்து உதிர்க்கும் சொல் கூரிய கத்திபோல் குத்தாமலும், அம்புபோல் துளைக்காமலும்

(2-ம் பக்கம் பார்க்க)

# மன நோயாளர் தங்கள் சூழலிலேயே சிகிச்சை பெற வேண்டும்

## ★ வட பிரிவில் 9000 பேருக்கு சிகிச்சை
## ★ கட்டுப்பாடு குறைவு
## ★ நோயாளர் நம்பிக்கைகளை உடனடியாக நீக்குவதில்லை

**தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற மனநோய் பற்றிய உலகமனநோய் வைத்தியர்கள் மகாநாட்டில் வட பகுதி மனநோயாளர் சிகிச்சைப் பிரிவு வைத்தியர் டாக்டர் அருளம்பலம் நிகழ்த்திய உரையின் முக்கியபகுதி இங்கு சுருக்கமாகத்தரப்படுகிறது. பயனுள்ள விஷயங்களை அவர்சுவையாகத் தந்திருக்கிறார். படித்துப்பாருங்கள்.**

டாக்டர் தா. அருளம்பல

1966-ம் ஆண்டுக்குமுன்னர் எங்கள் நாட்டின் மன நோயாளர்கள் யாவரும் அங்கொடையில் உள்ள இரண்டு மருத்துவ நிலையங்களிலுமே சிகிச்சை பெற்றனர். மனநோயாளர் சிகிச்சைக்கு இவற்றைவிட நாட்டின் ஏனைய பகுதிகளில் இத்தகைய வைத்தியசாலைகள் இல்லாததால் இவ்விரு வைத்தியசாலைகளிலும் பெருநெருக்கடி ஏற்பட்டது. இதனால் அனேகமான மன நோயாளர்கள் அங்கொடை வைத்தியசாலைக்குச் செல்லாமல் தங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் தங்கியிருந்து தங்களுக்கு விருப்பமான வைத்தியர்களிடம் சிகிச்சை பெற்றனர். சிலர் தங்களுக்கு நம்பிக்கையுள்ளவர்களிடம் சென்று மாந்திரீகமுறையில் சிகிச்சை பெற்றனர். இதனால் இந்நோயாளர் பலரது நோய் சிக்கலாகி நாட்சென்ற நோயாகியது. மற்றும் சிலர் எந்தவித சிகிச்சையும் செய்விக்காமல் இருந்தனர். இதனால் இந்நோயாளர்களின் வாழ்க்கை பாழாகி அவர்கள் தங்கள் குடும்பத்துக்குப் பாரமானார்கள். இவர்களைவிட அங்கொடைக்குச் சென்றவர்கள் அங்கு பல கஷ்டத்துக்குள்ளானார்கள். மிகுந்த செலவும், வசதியீனங்களும் அவர்களைப் பாதித்தன. சிகிச்சைபெற்றுத் திரும்பியவர்களும் சமுதாயத்தில் நன்கு மதிக்கப்படுவதில்லை. அங்கொடையென்றதும் பல வருடகாலமாக பைத்தியகாரர்களுக்கான இடம் என்றே மக்களின் மனதில் பதிந்துவிட்டதாலேயே அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவிட்டு வருபவர்களை நல்ல முறையில் வரவேற்பவர்கள் குறைவு.

### மனநோயாளர் சௌக்கிய குழுவின் சிபார்சு

உலகசுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த ஆலோசகர் டாக்டர் ஜே. ஷோனிக்கையும் ஒரு அங்கத்தவராகக் கொண்ட டாக்டர் டபிள்யு. ஜீ. விக்கிரமசிங்கவின் தலைமையிலான மனநோயாளர் சௌக்கியக்குழு நாட்டின் 9 மாகாணங்களிலும் முன்னணி பெரியாஸ்பத்திரிகளில் மனநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிக்கவேண்டுமென அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்தது. அங்கொடையில் இடநெருக்கடிப் பிரச்னையைத் தீர்க்கவும் மனநோயாளர் தங்கள் தங்கள் இடங்களிலேயே சிகிச்சைபெறவும் வசதிசெய்யவேண்டும் என்ற நோக்கம்கொண்டே மேற்படி குழு இந்தச் சிபார்சைச் செய்தது.

### எமது பிரிவு

எமதுபிரிவு 1956-ம் ஆண்டு ஜூலைமாதம் திறக்கப்பட்டது. இதில் 700,000 மனநோயாளருக்குச் சிகிச்சையளிக்கத்தக்க வசதிகள் உண்டு.

### 9000 பேர் சிகிச்சை பெற்றனர்

இந்தப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பகாலத்திலிருந்து பெருந்தொகையான மனநோயாளர்கள் சிகிச்சைக்கு வந்து குவிந்தனர். கடந்த நாலரைவருடகாலப் பகுதியில் 9,000 பேர் சிகிச்சைபெற்றனர். வார்ட்டுகள் திறக்கப்பட்டு நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டதும் நாடகம் பார்ப்பவர்கள் வருபவர்கள் போன்று வார்ட்டுகளைச் சுற்றிநின்று பெருந்தொகையான மக்கள் மனநோயாளர்களின் குழப்பங்களை வேடிக்கை பார்த்தனர். சில வாரங்கள் சென்றதும் இந்த வேடிக்கை பார்க்கும் நிலை மறைந்தது. மனநோயாளரும் இந்த ஆஸ்பத்திரிக்கு வரும் மற்றைய நோயாளிகள் போன்றே வந்து தங்கிச் சிகிச்சைபெற்றுச்செல்கின்றனர். மனநோய்பற்றியும், மனநோயாளர்கள் பற்றியும் மக்களிடம் உள்ள தப்பான அபிப்பிராயத்தையும், கருத்துக்களையும் நீக்கும்பொருட்டு முயற்சிகளும் எடுக்கப்பட்டன. பாடசாலைகள், கிராம அபிவிருத்திச்சபை, கிராம சபைகளிடமிருந்து மனநோய்பற்றிச்சொற்பொழிவுகள் நடாத்தி மாணவர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் மனநோய்பற்றிவிளக்குமாறு கோரிப் பலகடிதங்கள் வந்தன. இவற்றைபெற்று நாங்கள் ஒவ்வொரு இடத்துக்கும்சென்று மனநோய் பற்றியும் அவற்றிற்கு உடனடிச் சிகிச்சையளிக்கவேண்டிய அவசியம்பற்றியும் கூறிய பின்னர் அந்த இடங்களிலிருந்து கூடுதலான மனநோயாளர்கள்வந்துசிகிச்சை பெற்றுச்சென்றனர். இதைவிட மனநோயால் கஷ்டப்பட்ட ஒருவர் இங்குவந்து சிகிச்சை பெற்றுச் சுகமாகத் திரும்பியபின்னர் அவரைப் பார்த்துவிட்டு தங்களது வியாதியையும் போக்கிவிடலாம் என நம்பிக்கைகொண்டு பல மனநோயாளர் சிகிச்சை பெற வந்தனர்.

### கட்டுப்பாடு குறைவு.

இந்த மனநோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும்பகுதியில் இவர்களின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரும் உதவிசெய்ய அனுமதிக்கப்படுகின்றனர். மனநோயாளி ஒருவர் கோவிலுக்கோ, படத்துக்கோ அல்லது வீட்டுக்கோ சென்று திரும்பிவர விரும்பினால் அவர் விரும்பிய இடத்திற்குச் சென்றுவர அனுமதிக்கப்படுகிறார். இந்த வைத்தியசாலை எல்லா நோயாளிகளுக்கும் 3 வேளை உணவை இலவசமாக வழங்குகிறது. உறவினர்கள் இந்த நோயாளிகளுக்கு உணவு கொண்டு வந்துகொடுப்பதற்கும் தடைவிதிக்கப்படுவதில்லை.

### நம்பிக்கையை நீக்குவதில்லை

மேலும் இந்த நோயாளர்கள் சிலரின் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் சில நம்பிக்கைகளை உடனடியாகப் போக்குவதற்கு வைத்திய அதிகாரிகள் முயற்சியெடுப்பதில்லை. இந்த மனநோயாளர்களில் பலர் தங்களுக்கு மருந்து போடப்பட்டதாகவும், தாங்கள் வசியம் செய்யப்பட்டதாகவும் நம்புகிறார்கள். அமாவாசை, பூரணை நாட்களில் இவர்களின் நோயின் குணங்குறிகள் அதிகரிப்பதாக இவர்களை உறவினர்களும் இவ அறிவித்தனர். இந்தப் பிழையான நம்பிக்கையைப் போக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது இவர்களில் சிலர் சிகிச்சைக்கு ஆஸ்பத்திரிக்கு வருவதை நிறுத்தி மாந்திரீக முறையிலும், வேறு வைத்திய முறையிலும் பரிகாரம் தேடச்சென்றனர். நோயாளர்கள் இவ்வாறு மனமுடைந்து வேறு வழியை நாடாது நல்ல சிகிச்சை பெறுவதற்காக நாங்கள் அவர்களை அவர்களது நம்பிக்கையை கைவிடுமாறு வற்புறுத்துவதில்லை.

எங்களது இந்த வைத்தியப்பிரிவு ஆரம்பித்து ஒரு

(11-ம் பக்கம் பார்க்க)




## நவமதிகள் ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

இருக்கிறது. சனிக்கும் பூமிக்குமிடையே சில என் ஒற்றுமைகள் இருப்பதைக் காண்கிறோம். சூரியனுக்கும் சனிக்குமிடையிலுள்ள தூரம் சூரியனுக்கும் பூமிக்குமிடையிலுள்ளதூரத்தைவிட 9 1/2 மடங்கு அதிகமானது. சனியின் குறுக்களவு பூமியின் குறுக்களவைவிட 9 1/2 மடங்கு அதிகமானது. இதன் நிறை பூமியின் நிறையைவிட 95 மடங்கு அதிகமானது. இதன் அளவு பூமியின் அளவைவிட 950 மடங்கு அதிகமானது.

சனி கிரகம் தன்னைத்தானே சுற்றிவர சுமார் பத்துமணி நேரமாகிறது. அது சூரியனை ஒரு தரம்வலம் வர 29 1/2 வருடங்களாகின்றன.

மற்றக் கிரகங்களில் காணப்படாத சில அபூர்வமான அம்சங்கள் சனியில் காணப்படுகின்றன. இதனைச் சுற்றி ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று வளையங்கள் சுழன்றுகொண்டிருக்கின்றன. இவற்றின் குறுக்களவு சுமார் 170,000மைல்கள் எனலாம். வெளி வளையத்தின் வெளிப்புறத்திற்கும் உள் வளையத்தின் உட்புறத்திற்கும் இடையே 88,000 மைல் இடைவெளியிருக்கிறது. இவ்வளையங்கள் சிறுகோளத்திரள்களா அல்லது வேறு ஏதாவதா அல்லது வெறும் கண்மயக்கமா என்பதுபற்றி விஞ்ஞானிகள் இன்னும் ஒரு தீர்க்கமான முடிவு செய்யவில்லை.

வளையங்களைத் தவிர சனியைச் சுற்றி பத்து உபகிரகங்கள் சுழன்று திரிகின்றன. இவற்றுள் ஒன்றான டைட்டன் (Titan) என்பது நமது சந்திரனைக் காட்டிலும் பெரியது.

சனி கிரகம் நமது பூமிக்கு வெகு தூரத்தில் இருப்பதால் அதுபற்றிய முழுமையான நுட்ப ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் திருப்திகரமாக நடத்த இதுவரை முடியவில்லை. இவ்வளவு தூரத்திலிருந்தும் அது நம்மை எவ்வாறெல்லாம் தாக்குகிறதென்பதை சோதிட சாஸ்திரிகள் விபரமாக விளக்குவார்கள்:

MANOHARA - Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p.m.
Saturday, Sunday 10-30 A.M
Marie - France Boyer
in
SIN WITH A STRANGER
(Techni Color

ஸ்ரீ கமலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப. 6 30, 10-00
டி. ஆர். மகாலிங்கம்-
அஞ்சலிதேவி
நடித்த
மணிமேகலை

ராணி (யாழ்ப்பாணம்)
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
பி.ப. 2-30 இரவு 6-30, 10-00 நடித்த
கஸ்தூரி திலகம்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
தலைவன்

ராஜா (யாழ்ப்பாணம்)
இன்று மட்டும் பேபி ராணி
சுந்தரராஜன்—பத்மினி
நடித்த
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
குழந்தைக்காக

ரீகல் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப. 2-30
இரவு 9-45 மட்டும்
கே. ஏ. தங்கவேலு, அஞ்சலிதேவி,
டி. ஆர். ராமச்சந்திரன்
நடித்த
அடுத்தவீட்டுப் பெண் புதிய கொப்பி

REGAL - Jaffna NOW SHOWING
Daily at 5-00 & 7-15 p.m. only
Sat. Sunday 10-30 A. M.
Jim Brown - Rock Hudson in
ICE STATION ZEBRA (Color Scope)

# கிழக்கு - மேற்கு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து அது முறிந்து போகும் அறிகுறி தென்பட்டது. மார்ச் மாதம் 19-ம் திகதி இருபகுதியினருக்கும் ஜெனிகள் உட்பட உதவி புரிந்தவர் ஜனாதிபதி யாஹ்யாகான் இந்தியாவின் மேற்குப் பாகிஸ்தான் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். 19-ம் திகதி விடுக்க அழைப்பை பூட்டோ நிராகரித்தோடு. ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்கப்போவதாக விடுத்த பயமுறுத்தலையும் ஆராய்ந்துகொண்டிருந்த அவர், பின் அக்கருத்தை மாற்றி 12 உதவியாளர்களுடன் டாக்காவுக்கு மார்ச் 21-ல் வந்து சேர்ந்தார். மறுநாள் 22-ம்திகதி ஜனாதிபதி யாஹ்யாகான், முஜிபுர், பூட்டோ ஆகியோர் ஒன்றாகக் கூடி பேச்சுவார்த்தை நடத்தினர்: இந்தப் பேச்சுவார்த்தையின் பின் முஜிபுர் நிருபர்கள் மத்தியில் பேசுகையில், வங்காள தேசத்தின் நிலைமை மோசமாக இருக்கிறது. ஒத்துழையாமைப் போராட்டமும் அஹிம்சைப் போராட்டமும் அமைதியாக நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் விடுதலைக்கான எமது குறிக்கோளை அடையும் வரை போராட்டத்தைச் சிதையாமல் நடத்துகொண்டிருக்கும் என்றார். நிருபர்கள் ஏதாவது முன்னேற்றம் காணப்படுகிறதா என அவரைக் கேட்டபொழுது முன்னேற்றம் காணப்படாவிட்டால் நாம் ஏன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென பதிலிறுத்தனர்.

## துக்கதினம்

பாகிஸ்தான் தேசிய தினத்தைத் துக்கதினமாக அவாமி லீக் கொண்டாடியது. 1940-ம் ஆண்டு லாகூரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கிழக்குப் பாகிஸ்தான் சுயாட்சியான இறைமை கொண்ட மாநிலமாக இருப்பதற்கே நிறைவேற்றப்பட்டதென்பதை முஜிபுர் மக்களுக்கு நினைவுபடுத்தினர்.

டாக்கா பேட்டார் கேந்திரா தனது விமர்சனத்தில் சுயாதீனமுள்ள இரு பகுதிகளாக பாகிஸ்தான் இருக்கவேண்டுமென்பதே பாகிஸ்தானின் அடிப்படை என்றும், இந்த இரு பகுதிகளும் ஒன்றை ஒன்று பூரண இறைமை கொண்டதாக ஏற்கவேண்டும் என்றும் கூறிய அல்லாவெளி, இதற்கு மாற்று முற்றான பிரிவினையே என்றும் தெரிவித்தது. மார்ச் 24-ம் திகதி பேச்சுவார்த்தை முன்னேற்றம் பற்றி குழப்பமான செய்திகள் வெளிவந்தன. வங்காள தேசக் கொள்கையைக் கைவிடுவதைவிட தனது உயிரைத் தியாகம் செய்யத் தான் தயாராக இருப்பதாக முஜிபுர் அறிவித்தார்.

மார்ச் மாதம் 25-ம் திகதி இராணுவத்துக்கும் பொது மக்களுக்குமிடையே கைகலப்புகள் நடந்தன. டாக்கா பிராந்தியத்தில் பொது வேலை நிறுத்தமொன்றைச் செய்யுமாறு முஜிபுர் மக்களைக் கேட்டுக்கொண்டார். ஜோஷிமிட்டுவந்த ஆர்ப்பாட்டக்காரரிடம் 'நிராயுதபாணிகளான மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைக் கேள்விப்பட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். அரசியலமைப்புச் சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்வதாக யாஹ்யா அறிவித்த அதே நேரத்தில் இது நடந்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனடியாக உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

யாஹ்யா முஜிபுர் பேச்சுவார்த்தைக்கு இடையூறு ஏற்பட்டதற்குக் காரணம் மேற்குப் பாகிஸ்தான் இராணுவ-அதிகார வர்க்க- தொழிலதிபர்களின் பின்னணியில் பூட்டோ நின்று ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதை எதிர்ப்பதேயாகும் என்று டாக்கா பேட்டர் கேந்திரா விமர்சித்தது.

# வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப் பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். சாதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

## விற்பனைக்கு

வீடும் காணியும்:
யாழ்ப்பாணம் - மைனர் வீதி சகல வசதிகளும் உள்ள விசாலமான காவியான வீடும் இரண்டு பரப்பு அடங்கிய எட்டு துண்டு கட்டிடக் காணிகளும் உடன் விற்பனைக்குண்டு. ஆ. த. ஜெயசிங்கம், 5, முடுக்கு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 3471

## கல்வி

கடைச்சல் இயந்திரத்தில் (Lathe Operator) வேலை செய்ய அனுபவமுள்ளவர்கள் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும் வெள்ளியம்பதி அளவெட்டி. 3468

## கல்வி

மெக்கானிக் பயிற்சி
போதனை செய்முறை எமது 12-வது பருவ முழு நேர மோட்டார், டிராக்டர் டீசல் டிப்புளோமோ பயிற்சி வகுப்புகள் 6-9-71ல் ஆரம்பமாக இருக்கின்றன. விபரத்துடன் கூடிய விண்ணப்பப்படிவங்களுக்கு அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோ மோபைல், எஞ்ஜினியரிங் நிறுவனம், மொரிசாக் மாளிகை, 11/A & 11/B, கிராசிவி வீதி, யாழ்ப்பாணம். 3457

## விற்பனைக்கு

ராதா கோடாப்பவுடர்
சிறந்த வாசனையுடையது. கோடாத் தயாரிப்பாளர்களால் மிகவும் விரும்பப்படுவது சுருட்டிற்கு மணமும், குணமும் உண்டாக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3410

## விற்பனைக்கு

புதிய சொனி 'STEREO' ரேப்கோடர் T C 200 ஒன்றும், நேஷனல் பனசோனிக் டிரான்சிஸ்டர் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. 286 A, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 3473

கடைசி வாரம்
இந்தியாவின் பல நகரங்களிலும், ஈழத்தின் தலைநகர் கொழும்பிலும் 25 வாரங்களுக்கு மேல் காட்சியளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிய வெற்றிச் சித்திரம்.
லிடோ யாழ்நகர்
தினசரி காலை 10-30, பி ப 2 30, மாலை 6-30, இரவு 10-00



சாதனா
சஞ்ஜே
பால்ராஜ்ஸானி
சப்னம்
நடித்த
ஏக் பூல் தோமாலி
( ஹிந்தி )
( ஈஸ்ட்மன் கலர் )

# வயலில் அழகும்..

[4ம் பக்கத் தொடர்ச்சி] யின்மையால் சோற்றைப் புசியாமலிருந்தனர். அதனைக் கண்ட சின்னத்தம்பி அவர்களைப் பார்த்து ஏன் சாப்பிடாமலிருக்கின்றீர்கள் என்று விசாரித்தார். அதற்கு அவர்கள் 'கறியில்லையே' என்றனர். உச்சாயிற சின்னத்தம்பி தனது இலையிலிருந்த என்னை ... பிழிந்து எண்ணெயையும், தேங்காயை கையால் அழுத்திப் பாலாகவும் பிழிந்து சோற்றுடன் கலந்தார்: அதனைக் கண்ட இருவரும் அந்தப்பக்கமே திரும்பிப் பார்க்காமல் நடந்துவிட்டனர்.

இத்தகைய சின்னத்தம்பி அவர்களை நினைவூட்டும் வலைகயில் சாதனைச்செய்தவர்கள் சிலருள் மன்றிக்கோணிச் சன்னியாசியாரும் ஒருவர்.

(12-ம் பக்கம் பார்க்க)

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி மூன்று காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன் - சௌகார்ஜானகி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
துணைவன்

வெல்லிசினிமா
சுளிபுரம்
பி ப 2-30, 6-30, 10-00
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
ஆலயமணி

நாகமஸ்சினிமா
சுன்னாகம்
Saturday & Sunday 10-30 a m
Daily 4-30 p m. only
JASON AND THE
ARGONAUTS
8-வது வாரம்
தினசரி மாலை 6-30, 9-4
சனி, ஞாயிறு 2 30,
6-30 9 45
ஏ. பி நாகராஜன்- வரலக்ஷ்மி
நடித்த
ஏழு பிள்ளை
நல்லதங்காள்

## கேள்வி விளம்பரம்

# இ.போ.ச. சிற்றுண்டிச்சாலை

யாழ்- டிப்போ, கோண்டாவில்

கோண்டாவிலிலுள்ள இ. போ. ச. யாழ். டிப்போ சிற்றுண்டிச்சாலைக்கு சாப்பாடு, சிற்றுண்டி வகைகள் விநியோகிப்பதற்கான முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ். இ. போ. ச. டிப்போ சுப்பிரின்டென்டனால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர் திரும்பப்பெறும் வைப்புப்பணம் பத்து ரூபா செலுத்தி கேள்விப்பத்திரத்துக்கான படிவத்தை கோண்டாவில் டிப்போவில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரத்துக்கான விண்ணப்பங்கள் 10 9-71 பி. ப 1 மணிக்கு முடிவடையும். 2967

JAFFNA COLLEGE ALUMNI ASSOCIATION
COMPLIMENTARY DINNER
to the Rt Rev.
D J AMBALAVANAR
(Bishop of J. D. C. S. I.) &
Dr (Mrs) AMBALAVANAR
on 21-8-1971 at 8 00 P. M.
at Jaffna College

Members and Friends please contact Secretary Mr K Gunaratnam Proctor S. C & N. P Vaddukoddai or Treasurer Dr J B Selliah, Vaddukoddai
(Dinner fee Single Rs. 7/- With Spouse Rs. 13/-)
2965

